வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 30.12.2023 சனிக்கிழமை இதழ் : 364 பக்கங்கள் : 16

# தேர்தல் புறக்கணிப்பு சாத்தியமல்ல; பொது வேட்பாளராக கஜேந்திரகுமார்!


## விக்னேஸ்வரன் எம். பி.

**கொழும்பு, டிசெம்பர் 30**

**வடக்கு, கிழக்கை இராணுவத்தினர் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இவ்வாறான ஒரு பின்னணியில் தேர்தலை புறக்கணிப்பது நடைமுறை சாத்தியமற்றது என்று தெரிவித்துள்ள க. வி. விக்னேஸ்வரன் எம். பி., கஜேந்திரகுமார் போன்ற மும்மொழி புலமை மிக்கவர் பொது வேட்பாளராகக் களமிறங்க வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார். அத்துடன், தேர்தலில் அவர் போட்டியிட்டால் அவருக்கே தனது வாக்கு என்றும் கூறியுள்ளார்.**

ஜனாதிபதி தேர்தல் புறக்கணிப்பதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் அழைப்பு விடுத்திருந்தார். இது தொடர்பாக செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே விக்னேஸ்வரன் எம். பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“வழமை போன்று





கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கருத்து நடைமுறைக்கு சாத்திய மற்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் தேர்தல் புறக்கணிப்பை கண்காணித்து வழிநடத்தியிருப்பார்கள்.

எனினும், தற்போது வடக்கு - கிழக்கை இராணுவத்தினர் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இவ்வாறான ஒரு பின்னணியில் கஜேந்திரகுமார் எவ்வாறு தேர்தல் புறக்கணிப்பை வெற்றிகரமாக அமுல்படுத்துவார்? மேலும் சிங்கள தேசிய கட்சிகளுக்கு ஆதரவான உள்ளூர் கட்சிகள் இயங்கி வருகின்றன.

இவ்வாறான ஒரு பின்னணியில் எவ்வாறு கஜேந்திரகுமார் சிங்கள வேட்பாளர் ஒருவரை புறக்கணிக்குமாறு கோர முடியும்? கடந்த பொதுத்

11

## யாழ். - கொழும்பு ரயில் சேவை 5 மாதங்கள் இடைநிறுத்தப்படும்!

### புகையிரத திணைக்களம் அறிவிப்பு

*கொழும்பு, டிசெ. 30*

புகையிரத பாதை திருத்தப் பணிகளுக்காக எதிர் வரும் ஜனவரி 7ஆம் திகதி தொடக்கம் 5 மாதங்களுக்கு காங்கேசன்துறை - முதல் கொழும்பு வரையான ரயில் சேவை தற்காலிகமாக இடை நிறுத்தப்படும் என்று புகையிரத திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் என். ஜே. இந்திபொல தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர்

11

## மீனவர்களின் பிரச்னைகளுக்கு ஜனாதிபதியே தீர்வு தரவேண்டும்!

### மயிலிட்டி மீனவர்கள் வலியுறுத்து

*யாழ்ப்பாணம், டிசெ. 30*

கடற்றொழிலாளர்களின் பிரச்னைகள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்த வேண்டும் என மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க பிரதிநிதி சிவஞானராஜா மகேஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளும்போது கடற்றொழிலாளர் பிரதிநிதிகளை சந்திக்க வேண்டும்

11

## 28 நாட்களில் மன்னாரில் 88 டெங்கு நோயாளர்கள்

*மன்னார், டிசெ. 30*

மன்னாரில் கடந்த 28 நாட்களில் மட்டும் 88 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. விநோதன் தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், நாடளாவிய ரீதியில் தற்போது டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. நாடு முழுவதும் 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட டெங்கு நோயா ளர்கள் இந்த ஆண்டில் பதிவாகியுள்ளனர். மன்னார் மாவட்டத்தைப்

11



## இலங்கையின் நலனுக்காக இணைந்து செயல்படுவேன்!

### பிரதமருடனான சந்திப்பில் இந்திய தூதுவர்!

*கொழும்பு, டிசெ. 30*

நாட்டின் தலைவர்களின் வழிகாட்டுதலின்படி இலங்கையின் நலனுக்காக - இலங்கை மக்களுடன் இணைந்து செயல்படுவதும் இந்திய - இலங்கை ஒத்துழைப்பு மற்றும் 14 படிநிலைகளை முன்னெடுத்துச் செல்வதே எனது பணி என இந்திய உயர்ஸ்தானிகர்

11

## ‘யுக்திய’ விசேட நடவடிக்கை; 17 ஆயிரத்து 837 பேர் கைது!

### 450 கிலோ போதைப் பொருட்கள் கைப்பற்றல்

*கொழும்பு, டிசெ 30*

போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களை ஒடுக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் “யுத்திய“ நடவடிக்கையில் 12 நாட்களில் 17 ஆயிரத்து 837 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், ஹெரோயின், ஐஸ் உட்பட 450 கிலோவுக்கும் அதிகமான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. இதில், 10 கிலோ ஹெரோயின், 6 கிலோ ஐஸ், 288 கிலோ கஞ்சா, 2 இலட்சத்து 11 ஆயிரத்து 500 கஞ்சா செடிகள், ஒரு கிலோ ஹஷீஷ் போதைப்பொருள், 18 கிலோ மாவா, 71 ஆயிரத்து 271 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், கைதானவர்களில் 850 பேர் விசாரணைக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன், 186 பேருக்கு எதி ராக சட்ட விரோத சொத்து குவிப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைதானவர்களில் ஆயிரத்து 187 பேர் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் என்றும் இவர்கள் புனர்வாழ்வு

11

## கோவிட் -19 தொற்றால் பெண் மரணம்!

*கொழும்பு,டிசெ. 30*

கோவிட் - 19 தொற்றால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் உயிரிழந்தார். இந்த வாரத்தில் கோவிட் -19 தொற்றால் நிகழ்ந்த இரண்டாவது மரணம் இதுவாகும்.

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மதவாசியை சேர்ந்த 54 வயதான மூன்று தாயாரே

11

## நாட்டில் 22 வீதமானோர் கடன் சுமையால் தவிப்பு!

### எதிர்க்கட்சி தலைவர் சஜித்

*கொழும்பு, டிசெ. 30*

நாட்டில் குடும்பங்களின் வருமானம் 60 வீதத்தால் குறைவடைந்துள்ளது. பொருளாதார நெருக்கடியால் 22 வீதமானோர் கடன் சுமையில் தவிக்கின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

11

## வடக்கு-கிழக்கு தமிழர் ஆதரவு சஜித்துக்கே!

### அடித்து கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

*கொழும்பு, டிசெ. 30*

“ ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவையே ஆதரிப்பார்கள். அவர்கள் ஒருபோதும் தமிழ் பொது வேட்பாளரை விரும்பமாட்டார்கள்.”

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

11

# இப்படியும் நடக்கிறது

இந்த ஊர்க்குருவி கொஞ்சநாளாக கொழும்பில் பறந்து திரிந்ததால் வடக்கு - கிழக்கில் என்ன நடக்கிறது என்பதை கவனிக்க நேரம் இருக்க வில்லை.

தமிழரசின் தலைவர் தேர்தல் பிரசாரம் எப்படியிருக்கின்றது என்பதை அறிய சிலருக்கு அழைப் பெடுத்து கதைத்தபோது கிடைத்த தகவல்கள் வாயைப் பிளக்க வைத்தன.

பாராளுமன்றத் தேர்தலில் விருப்பு வாக்கு பெறுவதற்கு கட்சிக்குள் சக வேட்பாளர்களுக்கு எதிராக வேலை செய்வதற்குத்தான் கோடிக்கணக்கில் பணம் செலவு செய்வது என்று கேள் விப்பட்டிருக்கிறோம். ஆனால், கட்சி யின் பதவி ஒன்றுக்காகவும் தேர்தல் பிரசாரத்துக்கு இப்படி செலவு செய்கி றார்கள் என்ற தகவல் நம்பமுடியாத அளவுக்கு இருந்தது.

இரண்டு முக்கிய வேட்பாளர்களும் இப்போதும் நம்பிக்கையுடன் இருக்கி றார்களா? என்பதை அறிந்துகொள்ள ஆசை. ஒருவரின் மனநிலையை அறிய வேண்டும் என்றால், அந்த நண்பரிடம் கேட்டால் போதுமானது என்பதால் அவரிடம் பேசினேன்.

'அவர் தனது வெற்றியை உறுதிப் படுத்திய பிறகுதானே வெளிநாட் டுக்கே போனார்' என்றார் நண்பர்.

அடுத்த போட்டியாளரின் மன நிலையை அறிவதானால் அவருக்கு போட்டியாக அரசியல் செய்யும் யாரிடமாவது கேட்டு அறியலாம் என்று ஒருவரோடு தொடர்புகொண் டால், 'ஓமோம் அவர் மிக உறுதியான நம்பிக்கையில்தான் இருக்கிறாராம்' என்றார்.

இப்படி இருவரும் ஆள்ஆளுக்கு நம்பிக்கையில் இருப்பது நல்ல ஆரோக்கியமான விசயம்தான்.

இப்படி தமிழரசு விடயங்களை அறிந்துகொண்டிருந்தபோதுதான், அரசியல் ஆய்வாளர் யதீந்திரா தனது முகநூல் பக்கத்தில் எழுதியிருக்கின்ற தகவல் ஒன்றை காணமுடிந்தது.

அதனை வாசகர்களுக்கு தருவது பொருத்தமானதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அதனை அப்படியே முதலில் தருகின்றேன்.

'மதம் ஓர் அபின் போன்றது என்றார் கார்ல் மார்க்ஸ் - அந்தக் காலத்தில் இந்தக் கூற்றின்மீது ஒரு கவர்ச்சியிருந்தது. ஆனால், அதிகாரத் தின்மீது, மனிதன் காண்பிக்கும் வெறித்தனமான ஆசையை உற்று நோக்கினால், மார்க்சின் கருத்துப் பொய்த்து விட்டதாகவே தெரிகின் றது. ஏனெனில், அதிகாரத்தின் மீதான வெறியை விடவும் பெரிய போதை யிருப்பதாகத் தெரியவில்லை. தள்ளா டும் முதுமையில் ஒருவர் தனது மதத் தின் மீதான ஈடுபாட்டை விட்டுவிடு வார். ஆனால் அதிகாரம் என்று வரும்போதோ நிலைமை தலைகீழாக அல்லவா இருக்கின்றது.

சம்பந்தன் பற்றிய செய்தி யொன்றை பார்த்த போது - இந்தக் கருத்து சரியென்பது - மேலும் உறுதி யாகின்றது. சம்பந்தன் மீண்டும், தமி ழரசு கட்சியின் தலைமைக்கு கடிதம் அனுப்பியிருக்கின்றாராம் - அதாவது, திருகோணமலையில் கட்சிக் கிளைகள் ஒழுங்கமைக்கப்படாமல் தேசிய மகாநாட்டை நடத்த வேண்டாமாம்.

சம்பந்தன் ஏன் இந்த விடயத்தில் இந்தளவு அக்கறையை காண்பிக்கின் றார்?

மேலோட்டமாகப் பார்ப்பவர்க ளுக்கு சம்பந்தன் ஏதோ திருகோண மலையிலுள்ள அக்கறையால் இவ் வாறு பேசுவது போன்று தெரியக் கூடும் - ஆனால், உண்மையான விடயம் வேறு!

ஜனவரியில் இடம்பெறவுள்ள கட்சியின் புதிய தலைமைக்கான போட்டியை சம்பந்தன் விரும்ப வில்லை - அதனை எப்படியாவது தடுத்துநிறுத்த வேண்டுமென்று விரும்புகின்றார். சம்பந்தனின் விருப் பம் - வழமைபோல் கட்சியின் தலைவ ராக மாவையே இருக்க வேண்டும் அல்லது தலைமையை கிழக்கிலுள்ள ஒருவருக்கு வழங்கிவிட்டு செயலாள ராக மாவையை நியமிக்க வேண்டும். இதற்காகவே சம்பந்தன் கடுமையாக முயற்சிக்கின்றார்.

இதற்கு என்ன காரணம்?

சம்பந்தன் தற்போது இயங்க முடி யாத நிலையில் இருக்கின்றார். அவர் இயங்கிய காலம் முழுவதும், தமிழரசு கட்சி மட்டுமல்ல கூட்டமைப்பும் அவரின் கண்ணசைவில் இருந்தது. அவர் நினைத்ததே நடந்தது. எவரா லும் கேள்வி கேட்க முடியாத நிலை யில் அவர் இருந்தார். ஆனால், தற் போது அவரது நிலை மோசமாக கீழி றங்கிவிட்டது. தற்போது அவரது சொல்லை கேட்கக் கூடிய நிலையில் திருகோணமலை மாவட்டக் கிளை கூட இல்லை. இந்த நிலையில் புதிதாக தலைமையை ஏற்கப் போகிறவர்கள் (ஒன்றில் சிறி அல்லது சுமந்திரன்) - யாராக இருந்தாலும் அவர்களை சம்பந்தனால் கட்டுப்படுத்த முடியாது. இருக்கும் வரையில் அதிகாரத்தில் இருக்க வேண்டும். என்னும், சம்பந்த -ஆசை ஊசலாடிக் கொண்டிருக் கின்றது.

எனது கணிப்பில் சம்பந்தனிடம் இன்னொரு திட்டமும் நிச்சயம் இருக் கின்றது - அதாவது, தான் இருக்கும் வரையில் பதவியில் இருக்க விரும்பு கின்றார். பதவியில் இருந்தால் மட்டும் தான் அவர் தற்போது அனுபவிக்கும் அரச சலுகைகளை அனுபவிக்க முடி யும். இந்த நிலையில் அடுத்த ஆண்டு பாராளுமன்ற தேர்தல் இடம்பெற வுள்ளது. அதில் அவரால் போட்டி யிட முடியாது. போட்டி யிட்டாலும் வெற்றிபெற முடியாது - ஏனெனில், அவருக்கு வாக்களிக்கக் கூடியளவுக்கு திருகோணமலை தமிழ் மக்கள் அந்தள வுக்கு மாங்காய் மடையர்களாக இருப் பார்கள் என்று நான் நம்பவில்லை.

ஆனால், கிடைக்கும் தேசிய பட்டி யல் மூலம் அவர் தொடர்ந்தும் பதவி யில் இருக்கலாம். ஆனால், அதற்கு அவர் சொல்வதை கேட்பவர்கள் கட்சியின் தலைமையில் இருக்க வேண் டும். அதிலும் கட்சியின் தலைமையில் இருப்பவரே - எங்களுக்கு ஐயா போன்ற ஒரு முகம் தேவை - அதனால் அவர் பதவி நிலையில் இருக்க வேண்டியது அவசியம் - என்று கூற வேண்டும். அதை நிச்சயம் சுமந்திரன் செய்யமாட்டார் - சிறியும் செய்யப் போவதில்லை ஆனால், யோகேஸ் வரன் போன்ற ஒருவரை தலைவராகக் கொண்டுவந்தால் அவர் தலையாட்டு வார். செயலாளராக மாவை இருக்கும் போது காரியம் இலகுவாகக் கைகூடும்.

இவைகள் நடக்க வேண்டும் என் றால் ஜனவரியில் தலைமைக்கான போட்டி நடைபெறக்கூடாது. ஆகக் குறைந்தது அடுத்த நாடாளுமன்ற தேர்தல் இடம்பெறும் வரையிலாவது அதனை தள்ளிப்போட வேண்டும். தேசியப் பட்டியலை பெற்ற பின்னர் வேண்டுமானால் தலைமையை மாற்ற லாம் - ஏனெனில், அதன் பின்னர் எவர் வந்தாலும் அவர், வலுக்கட்டாயமாக சம்பந்தனை வெளியேற்றமாட்டார். சம்பந்தன் குடுமி சும்மா ஆடவில்லை.'

இதுதான் யதீந்திராவின் ஆரூடம். இதற்கு மேலும் இந்தப் பத்தியில் எழுதுவதற்கு என்ன இருக்கின்றது.!

**- ஊர்க்குருவி.**

# வடமராட்சி கிழக்கில் இரு படகுகள் தீக்கிரை!



வடமராட்சி, டிசெ. 30

வடமராட்சி கிழக்கு - கேவிலில் இரு மீனவர்களுக்கு சொந்தமான இரு படகுகள் மற்றும் 14 இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகள் என்பவை தீயிட்டு எரிக்கப் பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு கேவில் - பாலையடி - மேற்கு களப்பில் இடம் பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர் பில் மேலும் தெரிய வருவ தாவது இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற கேவில் கடற்றொழிலாளர் கூட்டத்தில் இறால்களின் இனப் பெருக்கத்துக்காகவும் அவற்றின் வளர்ச்சி அதிகரிப்புக்காகவும் இறால் கூடு கட்டு வதை தற்காலிகமாக தடை செய்தி ருந்தது.

இதை மீறி தொழிலில் ஈடுபட்ட பலரின் உபகரணங்கள் கைப்பற்றப்பட் டன. இந்த நிலையில், விஷமி ஒருவர் இரண்டு மீனவர்களுக்கு சொந்தமான மீன்பிடி உபகரணங்களை தீயிட்டு எரித் துள்ளார் என்று கேவில் கடற்றொ ழிலாளர்கள் தெரிவித்தனர்.

க. மதிவாணன், க. சிவம், ஆகியோ ரின் படகுகள் மற்றும் வலைகளே இவ்வாறு தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மருதங் கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-02)

# "தட்டம்மை நோய் பரவல் நாட்டில் அதிகரிக்கின்றது"

கொழும்பு, டிசெ. 30

நாட்டில் தற்போது தட்டம்மை நோய் அதிகளவில் பரவிவருவதாக சுகா தார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் இந்த வருடம் மே முதல் 710 தட்டம்மை நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தொற்றுநோய் நிபு ணர் மருத்துவர் சமித்த கினிகே தெரி வித்தார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, யாழ்ப்பாணம், குருநாகல் மற்றும் கல்முனை ஆகிய 9 மாவட்டங்களில் தட்டம்மை நோயா ளர்கள் அதிகம் பதிவாகியுள்ளனர்.

இதன்படி, கொழும்பு மாவட்டத்தில் 299 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கம்பஹா மாவட்டத்தில் 232 நோயா ளர்கள் பதிவாகியுள்ளனர். களுத்துறை யில் 36 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

பதிவான 710 தட்டம்மை நோயா ளர்களில் 123 பேர் ஒன்பது மாதங்க ளுக்கும் குறைவான குழந்தைகளாவர். மேலும், ஒன்பது மாதங்கள் முதல் மூன்று வயது வரையிலான 93 குழந்தைகளும், 4 வயது முதல் 15 வயதுக்குட்பட்ட 99 பேரும் , 16 முதல் 20 வயதுக்கு இடைப் பட்ட 44 பேரும் , 21 முதல் 30 வயதுக்கு இடைப்பட்ட 246 பேரும், 30 வயதுக்கு மேற்பட்ட 105 பேரும் பதிவாகியுள்ளனர்.

எனவே, தட்டம்மை நோயால் பாதிக் கப்பட்ட 9 மாவட்டங்களிலுள்ள 6 முதல் 9 வயதுடைய குழந்தைகளுக்கு தட்டம் மைக்கான தடுப்பூசி ஜனவரி 6 ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை அந்த மாவட்டங்களில் அமைந்துள்ள பொது சுகாதார பிரிவில் தடுப்பூசிகளை பெற் றுக்கொள்ளலாம்.

இந்த தட்டம்மை நோயால் குழந்தை கள் உயிரிழக்கக் கூடும் என்பதால், குழந் தைகளுக்கு விரைவில் தடுப்பூசியை பெற் றுக்கொள்ளுமாறு பெற்றோர்களுக்கு சுகா தார அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

(ஐ)

# வற் வரியின் தாக்கத்தை குறைக்க அரசு நடவடிக்கை

## நிதி அமைச்சின் வரி கொள்கை ஆலோசகர்

கொழும்பு, டிசெ. 30

பெறுமதி சேர் வரி (வற்) உள்வாங் கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள்மீது விதிக்கப்பட்டுள்ள ஏனைய வரிகளை நீக்கி உரிய வரி மாற் றங்களை செய்து வற் திருத்தத்தின் தாக் கத்தை குறைப்பதற்கு அவசியமான நட வடிக்கைகளை அரசாங்கம் முன்னெ டுத்து வருகிறது என்று நிதி அமைச்சின் வரிக் கொள்கை ஆலோசகர் தனுஜா பெரேரா தெரிவித்தார்.

"பெறுமதி சேர் வரி (வற்) திருத்தச் சட்டம் மற்றும் அதன் தாக்கம்" என்ற தலைப்பில் நேற்று முன்தினம் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே நிதி அமைச்சின் வரிக் கொள்கை ஆலோசகர் தனுஜா பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதாரம் தொடர்பான விசேட அறிவுள்ள ஒரு சிலர்கூட ஜனவரி முத லாம் திகதி முதல் வற் அமுல்படுத்தப்பட் டதன் பின்னர் ஒரு குடும்பத்தின் மாதாந் தச் செலவு மேலும் 40 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்கும் என்ற கருத்தைக்கூட சமூகமயப்படுத்துவதாகவும், ஆனால் அந்த கருத்துகள் முற்றிலும் தவறானவை.

மேலும், கல்விச் சேவைகள், மின் சாரம், சுகாதாரம், மருத்துவம், பயணிகள் போக்குவரத்து, அனைத்து காய்கறிகள் மற்றும் பழங்கள் உட்பட ஏறக்குறைய 90 வகையான பொருட்களுக்கு வற் வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றும், சிறப்பு வர்த்தக வரி விதிக்கப் பட்டுள்ள 65 வகையான பொருட்களுக்கு வற் விதிக்கப்படாது.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் ஏ. எம். நபீர், ஜனாதிபதி அலுவலகத்தின் அரச வருமான பிரிவின் பணிப்பாளர் நாயகம் எம். ஜே. குணசிறி மற்றும் பணிப்பாளர் கே. கே. ஐ. எரந்த, இலங்கை மத்திய வங்கியின் பொருளா தார ஆய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஜானக எதிரிசிங்க ஆகியோ ரும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
30.12.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழரசு கட்சியின் மகாநாட்டு நெருக்கடி

இலங்கை தமிழரசு கட்சிக்குள் நிலவும் நெருக்கடியானது அடிப்படையில் அந்தக் கட்சியின் உள்ளகப் பிரச்னைதான் - ஆனால், தமிழரசு கட்சியின் நெருக்கடி என்பது சில தனிநபர்களின் பிரச்னையில்லை - மாறாக அது தமிழ் மக்களின் பிரச்னையாகவும் அதேவேளை, தமிழ்த் தேசிய அரசியல் எந்தளவுக்கு தனிநபர்களின் அதிகார ஆசைக்குள் சிக்கியிருக்கின்றது என்பதற்குமான உதாரணமாக மாறியிருக்கின்றது. இந்த அடிப்படையில்தான் இந்த விடயம் கவனிப்பைப் பெறுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் முன்னைநாள் தலைவருமான இரா. சம்பந்தன் முதுமை காரணமாக இயங்க முடியாத நிலையில் இருக்கின்றார். கடந்த மூன்று வருடங்களாகத் தனது சொந்த மாவட்ட மக்களுடன் தொடர்பற்றவராக இருக்கின்றார். பாராளுமன்றத்துக்கும் செல்ல முடியாத நிலையில் இருக்கின்றார். ஆனால், தற்போது திடீரென்று திருகோணமலை மாவட்டத்தில் தனது ஆதரவாளர்கள் புறக்கணிக்கப்பட்டனரெனவும் மாவட்ட கிளைக்குள் திட்டமிட்டு சம்பந்தனது செல்வாக்கை சரிக்கும் நோக்கில் செயல்பட்டதாகவும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றார். அத்துடன், அது தொடர்பில் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் கோரியிருக்கின்றார். இந்த விடயங்கள் சரி செய்யப்படாமல், கட்சியின் தேசிய மகாநாட்டை நடத்தக்கூடாதென்னும் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றார்.

விடயங்களை ஆழமாக நோக்கும்போது, தமிழரசு கட்சியின் தேசிய மகாநாட்டை நடத்துவதை சம்பந்தன் விரும்பவில்லை என்றே தெரிகின்றது. எதிர்வரும் ஜனவரி மாதத்தில், கட்சிக்கான புதிய தலைமை தெரிவு செய்யப்படவுள்ள நிலையிலேயே சம்பந்தன் அதற்கு முட்டுக்கட்டை போடும் நோக்கில் இவ்வாறானதொரு நகர்வை மேற்கொள்கின்றார். இதற்கான ஒரு துருப்புச் சீட்டாகவே திருகோணமலை விவகாரத்தை பயன்படுத்துகின்றார். உண்மையிலேயே, சமபந்தனுக்கு திருகோணமலை தமிழரசு கட்சியின் மாவட்ட கிளையின்மீது கரிசனை இருந்திருந்தால் கட்சியின் கிளைகள் புனரமைக்கப்பட்டபோதே இந்த விடயங்களைப் பேசியிருக்க வேண்டும். ஏனெனில், கட்சியின் கிளை புனரமைப்புகள் இரகசியமாக நடைபெறவில்லை.

சம்பந்தன் தேசிய மகாநாடு நடத்தப்படுவதை தடுக்க முயற்சிக்கின்றார் என்பது வெள்ளிடைமலை. இதற்கு என்ன காரணம்? சுமந்திரனோ அல்லது சிவஞானம் சிறிதரனோ தலைவராக வருவதை அவர் விரும்பவில்லையா அல்லது அவர்களில் ஒருவர் தெரிவானால் கட்சிமீதான ஒட்டுமொத்தச் செல்வாக்கையும் தான் இழக்க நேரிடலாம் என்று அவர் அச்சப்படுகின்றாரா? ஏனெனில், அடுத்த ஆண்டு பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தலில் அவரால் போட்டியிட முடியாது. ஆனால், தேசிய பட்டியல் மூலம் அவர் தொடர்ந்தும் பதவியில் இருக்கலாம். ஆனால், புதிதாக தலைமைப் பொறுப்பை ஏற்பவர்கள் அதற்கு இணங்காவிட்டால் அவரால் பதவியில் தொடர முடியாது. பதவியில்லாவிட்டால் சம்பந்தனுக்கு எந்தவொரு பெறுமதியும் இருக்கப் போவதில்லை.

இதற்கு மாறாக பிறிதொரு காரணம் இருப்பதற்கான வாய்ப்பு இல்லை. அப்படியொரு காரணம் இருக்க முடியுமென்றால் தலைமைப் போட்டியில் ஈடுபடும் இருவரில் எவருமே கட்சியின் தலைமைக்கு வரக்கூடாதென்று சம்பந்தன் எண்ண வேண்டும். சம்பந்தன் தீர்மானிக்கும் இடத்தில் இருந்தபோது, தமிழரசு கட்சியின் எதிர்காலம் தொடர்பிலும் சரியாக சிந்திக்கவில்லை. இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலம் தொடர்பிலும் சிந்திக்கவில்லை. தனது கதிரையை எவ்வாறு கெட்டியாகப் பிடித்துக் கொள்வது என்பது பற்றி மட்டுமே சிந்தித்தார். இதன் விளைவாகவே, இன்று தமிழ்த் தேசிய அரசியல் கட்டமைப்பு மோசமான பின்னடைவை சந்தித்திருக்கின்றது.

இதனை ஏனைய கட்சிகளின் தலைவர்கள் ஒரு முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டும். தாங்கள் இயங்கக்கூடிய நிலையில் இருக்கின்றபோது, தங்களின் கட்சியின் எதிர்காலத்துக்கான வலுவான அடித்தளத்தை இடவேண்டும். அவ்வாறில்லாது போனால் இன்று தமிழரசு கட்சிக்குள் இடம்பெறும் அதிகார மோதல் போன்ற விடயங்களையே சந்திக்க நேரிடும்.

# புதிய வருடத்தில் ஓர் அரசியல் தீர்வு?

*சமாதானத்துக்கான மதங்களின் சர்வதேச அமைப்பின் மதத்தலைவர்களுடனும் அந்த அமைப்பின் இலங்கைப் பிரிவின் தலைவர்களுடனும் டிசம்பர் 19 ஆம் திகதி நடத்திய சந்திப்பின்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசியல்வாதிகள் இனவாதத்தை தூண்டிவிடுவதில் அக்கறை காட்டினாலும் பெரும்பான்மையான மக்கள் இன்னொரு மோதலை விரும்பவில்லை என்று கூறினார்.*

*இலங்கை மக்கள் இனவாதிகள் அல்லர். ஆனால் அரசியல்வாதிகளினால் தூண்டிவிடப்பட்டார்கள். இனங்களுக்கு இடையிலான அதிகாரப்பகிர்வு மற்றும் மாகாணங்களுக்கான அதிகாரப்பரவலாக்கத்தின் அடிப்படையிலான அரசியல் தீர்வொன்றுக்கான ஆதரவு மட்டம் இரு வருட இடைவெளியில் 23 சதவீதத்தில் இருந்து 68 சதவீதமாக அதிகரித்து மக்களின் அபிப்பிராயம் அரசியல் தீர்வுக்கு ஆதரவாக திரும்பியிருக்கிறது என்றும் அவர் மதத்தலைவர்கள் மத்தியில் தெரிவித்தார்.*

*அரசியல் தீர்வொன்றுக்கான முயற்சிகளில் முன்னேற்றத்தைக் காண்பதற்கு தற்போதைய தருணம் வாய்ப்பானது என்று தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.*

*இலங்கையின் 75 சுதந்திரதினத்துக்கு முன்னதாக அரசியல் தீர்வொன்றைக் காண்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு வருடத்துக்கு முன்னர் உறுதியளித்ததை நினைவுபடுத்த விரும்புகிறோம். சுதந்திர தினத்துக்கு பிறகு 11 மாதங்கள் கடந்துவிட்டன.*

*உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவொன்றையும் தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தையும் அமைப்பதற்கான இரு முக்கியமான சட்ட மூலங்களை அமைச்சரவை அங்கீகரித்திருப்பது குறித்து நாம் மகிழ்ச்சியடைகிறோம்.*

*பொதுமக்களும் அக்கறைகொண்ட தரப்புகளும் ஆராய்ந்து மேலும் யோசனைகளை சமர்ப்பிப்பதற்கு வசதியாக இந்த இரு சட்ட மூலங்களும் விரைவில் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படவிருக்கின்றன.*

*புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தின் மத்தியில் செயலூக்கம் கொண்ட ஒரு பிரிவினரையும் மூத்த பௌத்தகுருமாரில் ஒரு பிரிவினரையும் ஒன்றிணைப்பதில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் சிவில் சமூக முயற்சி அரசியல் தீர்வொன்றுக்கான முன்னேற்பாட்டுப் பணிகளுக்கு களம் அமைத்துத்தரக்கூடிய இன்னொரு நேர்மறையான நிகழ்வுப்போக்காகும்.*

*இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை இரு தரப்பிலும் காணப்படும் தீவிரமான நிலைப்பாடுகளுக்கு இடையிலான வெளியை நிரவுவதற்கான முதல் அடியெடுத்துவைப்பாக இந்த சிவில் சமூக முயற்சியை தேசிய சமாதானப் பேரவை நோக்குகிறது. இந்த முயற்சியின் மூலமாக பரந்த பேச்சுவார்த்தைகளுக்கும் ஆழமான புரிந்துணர்வுக்கும் வழிவகுக்கமுடியும்.*

*இனப்பிரச்சினையை ஒப்புரவானதும் நிலைபேறானதுமான முறையில் தீர்த்து வைப்பதற்கு அவசியமான ஒரு தொகுதி கூட்டு கோட்பாடுகளை வகுப்பதில் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் உறுப் பினர்களும் பௌத்தகுருமாரும் இணக்கத்துக்கு வரக் கூடியதாக இருந்ததைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.*

ஶ்‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

*இந்த கோட்பாடுகள் பாராளுமன்றத்தில் உள்ள அரசியல்வாதிகளுடனும் முக்கியமான சகல மதத் தலைவர்களுடனும் பகிர்ந்து கொள்ளப்பட்டு அவர்களும் பொதுவில் இணக்கத்தை தெரிவித்திருக்கிறார்கள்.*

*சமூகங்களுக்கு இடையில் சமத்துவத்தை வலியுறுத்தும் பண்புகளை மையமாகக் கொண்டவை என்பதால் இந்த கோட்பாடுகளை இராஜதந்திர சமூகமும் வரவேற்றிருக்கிறது.*

*இந்த முன்முயற்சிகளை எதிர்க்கின்ற சிலரும் இருக்கிறார்கள். குறுகிய அரசியல் நலன்களில் கவனம் செலுத்துவதை விடுத்து நாட்டின் பொது நன்மைக்காக இந்த முயற்சிகளை பலப்படுத்துவதற்கான வழிவகைகளைக் கண்டறிய வேண்டுமென்ற எதிர்க் கருத்துக்களைக் கொண்டவர்களை தேசிய சமாதானப் பேரவை வேண்டிக்கொள்கிறது.*

*ஆனால், போர் முடிவுக்கு வந்து சுமார் 15 வருடங்கள் கடந்துவிட்டபோதிலும், வடக்கு,கிழக்கு மாகாணங்களில் பெருமளவில் இராணுவப் பிரசன்னம் இருப்பதுடன் படையினர் கடுமையான கண்காணிப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதை எம்மால் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.*


*வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள நிலங்கைளை வெளியில் இருந்து வருபவர்கள் மதரீதியான தேவைகளுக்காகவும் விவசாய நோக்கங்களுக்காகவும் அபகரிப்பதனால் பிரச்சினைகள் தோன்றியிருப்பதையும் காண்கிறோம். இந்த அபகரிப்பு நடவடிக்கைகள் அங்கு வாழும் மக்களுக்கு பாதகமாக அமைகின்றன.*

*அதனால் முன்னுரிமைக்குரிய தேவையாக அந்த மக்கள் நம்பக்கூடிய, அவர்களது நிலங்களை பாதுகாக்கக்கூடிய, தனிப்பட்ட பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய , தங்களது மொழியை அவர்கள் சுதந்திரமாகப் பயன்படுத்துவதற்கு வசதியான ஒரு நிருவாகத்தை தரக்கூடிய அரசாங்கம் ஒன்று இருக்கவேண்டும்.*

*இந்த நோக்கத்துக்காகவே மாகாண சபைகள் முறை கொண்டுவரப்பட்டது. மக்களினால் தெரிவு செய்யப்படுபவர்கள் மாகாணங்களை ஆட்சிசெய்யக்கூடியதாக மாகாணசபைகளுக்கு தேர்தல்களை தாமதமின்றி நடத்துமாறு அரசாங்கத்தை நாம் வலியுறுத்திக்கேட்டுக்கொள்கிறோம்.*

*இன்னொரு வருடம் முடிவுக்கு வந்து புதிய வருடம் ஒன்று பிறக்கும் நிலையில், களத்தில் நிலவும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பதுடன் இலங்கையில் சமத்துவமான மக்களாக தங்களது பொருளாதார மற்றும் நீதிப் பிரச்சினைகளுக்கு முடிவுகாணப்படும் என்று வடக்கு, கிழக்கு மக்கள் மனதில் நம்பிக்கையுணர்வு ஏற்படக்கூடியதாக அரசாங்கம் செயற்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



டிசெம்பர் - 30 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - மார்கழி 14
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : சதுர்த்தி




**மேடம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**இடபம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புது நட்பு மலரும். நண்பர்களால் ஆதாயம் பெருகும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் உடைபடும்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பணிப்போர் வந்து நீங்கும். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். ஊழியர்களால் பிரச்னைகள் வந்து விலகும். எதிலும் கவனம் தேவைப்படும்.

**கன்னி**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சிறப்பான நாள்.

**துலாம்**
தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக்கொடுத்து வேலை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால்திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி வரும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**மகரம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கும்பம்**
சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். அமோகமான நாள்.

**மீனம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். புதிய சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

# விஜயகாந்தின் உடலுக்கு மக்கள், பிரலங்கள் அஞ்சலி!



சென்னை, டிசெ. 30

சென்னை தீவுத்திடலில் தே. மு. தி. க. தலைவர் விஜயகாந்த் உடலுக்கு மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர். அரசியல் பிரமுகர்களும் திரைப் பிரபலங்களும் மேடையில் உள்ள விஜயகாந்த் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறிச் சென்றனர்.

தே. மு. தி. க. தலைவர் விஜயகாந்த் நேற்று முன்தினம் காலை காலமானார். அவரின் மறைவையடுத்து சில மணி நேரம் சாலிகிராமம் வீட்டில் வைக்கப்பட்ட அவரது உடல் அங்கிருந்து ஊர்வலமாக கோயம்பேட்டில் உள்ள தே. மு. தி. க. பணிமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு கட்சித் தொண்டர்களும், ரசிகர்களும் பொதுமக்களும் குவிந்தனர். கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பொலிஸார் திணறினர். இரவு வரை அங்கே பல்வேறு பிரபலங்களும் வந்து அஞ்சலி செலுத்தினர்.

நடிகர்கள், ரஜினி, கமல், விஜய், இசையமைப்பாளர் இளையராஜா ஆகியோர் வந்து கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்திச் சென்றனர்.

விஜயகாந்த் உடலுக்கு மக்கள் இறுதி அஞ்சலி செலுத்த போதிய முன்னேற்பாடுகள் செய்யப்படாததால் நெரிசலில் மக்கள் சிக்கி அவதிக்குள்ளாயினர். இதன் காரணமாக தற்போது விஜயகாந்தின் உடல் தீவுத்திடல் மைதானத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

மக்கள் அஞ்சலி செலுத்தி சென்று திரும்ப ஏதுவாக பாதைகள் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் திரளாக வந்து அஞ்சலி செலுத்திச் செல்கின்றனர். பாதுகாப்புப் பணியில் ஆயிரக்கணக்கான பொலிஸார் ஈடுபட்டனர்.

தே. மு. தி. க. பணிமனையில் விஜயகாந்தின் உடல் நேற்று இரவு அடக்கம் செய்யப்பட்டது.

(ஐ)

# சாதிவாரி கணக்கெடுப்பை தமிழக அரசு நடத்த வேண்டும்

## வலியுறுத்தி முதல்வருக்கு பா. ம. க. கடிதம்

சென்னை, டிசெ. 30

தமிழ்நாட்டில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்துவது தொடர்பாக முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு பாமக நிறுவுநர் ராமதாஸ் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில்,

“தமிழ்நாட்டில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பது 83 ஆண்டு கால கோரிக்கை ஆகும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1881ம் ஆண்டில் தொடங்கி 1931ம் ஆண்டு வரை ஒவ்வொரு பத்தாண்டுக்கும் ஒருமுறை சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வந்தது. இரண்டாம் உலகப்போர் காரணமாக 1941ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு சாதிவாரியாக நடத்தப்படாத நிலையில், அப்போதிலிருந்தே சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்புகான கோரிக்கைகள் தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றன.

1980ம் ஆண்டு வன்னியர் சங்கம் உருவாக்கப்பட்ட நாளில் தொடங்கி 43 ஆண்டுகளாக சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்புக்காக நான் குரல் கொடுத்து வருகிறேன். அதன் பிறகு 1989, 2020, 2021 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாட்டில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்துவதற்கான சூழல் ஏற்பட்டது. ஆனால், நல்வாய்ப்பு கேடாக அந்த வாய்ப்புகள் தவறவிடப்பட்டன. இந்தியாவில் தமிழ்நாட்டுக்கு இணையாக சமூகநீதியை பாதுகாக்கும் மாநிலங்களில் ஒன்றான பீஹாரில் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அதன் விவரங்கள் காந்தியடிகளின் பிறந்தநாளான கடந்த ஒக்ரோபர் 2ம் நாள் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு ஆதரவான குரல்கள் எழுந்துள்ளன.

தமிழ்நாட்டின் முதலமைச்சராகிய தாங்களும் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்புக்கு ஆதரவான நிலையையே எடுத்து வந்திருக்கிறீர்கள். அத்தகைய கணக்கெடுப்பை மத்திய அரசு நடத்தும் என்று எண்ணி காத்திருப்பதா? தமிழ்நாடு அரசே அதன் அதிகாரத்தை பயன்படுத்தி சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதா? என்பது தான் நமக்கு இடையே உள்ள மாறுபட்ட கருத்து நிலைப்பாடுகள் ஆகும்.

அதேநேரத்தில், பிரதமரும் மத்திய உள்துறை அமைச்சரும் பல்வேறு மேடைகளில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்புக்கு எதிராக பேசி வருகின்றனர். அதனால்தான், சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை தமிழக அரசே சொந்தமாக நடத்த வேண்டும் - என்றுள்ளது.

(ஐ)

# விஜயகாந்த் நலமுடன் இருந்திருந்தால் தமிழ்நாட்டின் அரசியலே மாறியிருக்கும்!

## நாம் தமிழர் கட்சியின் சீமான்

தூத்துக்குடி, டிசெ. 30

விஜயகாந்த் நலமுடன், உயிரோடு இருந்திருந்தால் தமிழ்நாட்டின் அரசியல் போக்கே மாறி இருக்கும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

நேற்று தூத்துக்குடியில் செய்தியாளர்களை சந்தித்த அவர் தெரிவித்தவை வருமாறு,

விஜயகாந்த் என்றால் அச்சமின்மை, துணிவுதான். எதற்கும் பயப்படமாட்டார். தவசி படத்தில் பணியாற்றும்போது அவருடன் மனம்விட்டு பேசுகிற வாய்ப்பு கிடைத்தது. அப்போதுதான் நெருக்கமான பழக்கம் ஏற்பட்டது. அவரைப்போல சிறந்த மனிதர் கிடைப்பது அரிது. புகழின் உச்சியில் இருந்தபோதும் அதை தலையில் ஏற்றிக் கொள்ளாமல் இருந்தார்.

விஜயகாந்த் நலமுடன், உயிரோடு இருந்திருந்தால் தமிழ்நாட்டின் அரசியல் போக்கே மாறி இருக்கும். அவர் ஆகச் சிறந்த மனிதர், பண்பாளர். விஜயகாந்த் இடத்தை நடிப்பில் வேண்டும் என்றால் பூர்த்தி செய்ய ஒருவர் வரலாம். ஆனால், அவரைப்போல சிறந்த மனிதர் ஒருவர் வருவது கடினம். ஜெயலலிதா, கருணாநிதி போன்ற பெரிய அரசியல் தலைவர்கள் இருக்கும்போதே அரசியலுக்கு வந்து 10.5 சதவீத வாக்குகள் வாங்கி எதிர்க்கட்சி அந்தஸ்து பெற்றது என்பது சாதாரண விசயம் அல்ல. விஜயகாந்த் பார்க்கத்தான் கம்பீரமாக இருப்பார். ஆனால் பேசி பழகுவதில், மனதளவில் அவர் ஒரு குழந்தைதான் - என்றார்.

(ஐ)

# சிறைச்சாலைகளில் இடநெருக்கடி நிலை!

## அமைச்சர் விஜயதாஸ சுட்டிக்காட்டு



**கொழும்பு, டிசெ. 30**
**நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் விசேட நடவடிக்கையின் போது பலரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுவருவதால் தற்போது சிறைச்சாலைகளில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக நீதி மற்றும் சிறைச்சாலை விவகாரங்கள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடளாவிய ரீதியில் முப்படைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் யுக்திய நடவடிக்கையின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைப்படுத்தப்படும் கைதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இதன் காரணமாக சிறைச்சாலைகளில் தற்போது இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நாடு முழுவதும் உள்ள 28 சிறைச்சாலைகளிலும் 2, 255 இற்கும் அதிகமான புதிய கைதிகள் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கை ஆரம்பிக்க முன்பதாக சிறைச்சாலைகளில் 28ஆயிரம் கைதிகளே தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். பொதுவாக இந்த நாட்டில் சிறைச்சாலைகளில் 11,000 பேரைத் தடுத்து வைக்க முடியும்.

அதேநேரம் பெண் கைதிகளின் எண்ணிக்கையும் 800 இல் இருந்து 1,124 வரை அதிகரித்திருக்கிறது. அத்துடன் சிறைச்சாலைகளின் நெருக்கடிக்கு நீண்ட கால தீர்வாக மில்லனிய பிரதேசத்தில் 50 ஏக்கர் காணி தெரிவு செய்து அங்கு கட்டடங்களை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

என்றாலும் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு அரசுக்கு சொந்தமான பயன்படுத்தாமல் இருக்கும் பாதுகாப்பான கட்டடங்களை தெரிவு செய்து, சிறைச்சாலைகளில் இருக்கும் மேலதிக கைதிகளை குறித்த கட்டடங்களுக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்"-என்றார்.

# 54 தேசிய பாடசாலைகளில் இதுவரை அதிபர்கள் இல்லை

கொழும்பு, டிசெ. 30
நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று சுமார் மூன்று மாதங்கள் கடந்துள்ளபோதிலும் கொழும்பு றோயல் உட்பட 54 தேசிய பாடசாலைகளுக்கு புதிய அதிபர்கள் நியமனம் தொடர்ந்தும் தாமதமாகி வருகின்றது.

நிரந்தர அதிபர்கள் இல்லாததால், அந்த பாடசாலைகளின் நிர்வாக நடவடிக்கைகள் தடைபட்டுள்ளன. அவற்றில் பதில் கடமையாற்றும் அதிபர்கள் பணிபுரிவதால் சில சமயங்களில் முறையான முடிவுகளை எடுக்கத் தயங்குவதாக பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

74 தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிப்பதற்காக கல்வி அமைச்சினால் விடுக்கப்பட்ட விண்ணப்பங்களின் படி 54 பாடசாலைகளே விண்ணப்பித்திருந்தன. இதற்கான நேர்முகப்பரீட்சைகள் நடைபெற்று சுமார் மூன்று மாதங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை அதிபர்கள் நியமிக்கப்படவில்லை. (அ)

# மதுபானத்தின் விலைகளும் ஜனவரி முதல் அதிகரிக்கும்

கொழும்பு, டிசெ. 30
பெறுமதி சேர் வரி அதிகரிப்புடன் மதுபானத்தின் விலையும் ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஜனாதிபதி அலுவலகத்தின் அரச வருமான பிரிவின் பணிப்பாளர் எரந்த கொடித்துவக்கு இதனை தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் புதிய வரித் திருத்தத்திற்கு அமைய பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகள் மீது 18 வீத பெறுமதி சேர் வரி விதிக்கப்படவுள்ளது. (அ)

# லயன் அறையில் இருந்து தாயும் குழந்தையும் சடலங்களாக மீட்பு

கொழும்பு, டிசெ. 30
இரத்தினபுரி - அலபத பிரதேசத்தில் லயன் குடியிருப்பு பொன்றில் அறையில் இருந்து இளம் தாய் மற்றும் அவரது சிறு மகனின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பெண் தனது மகனைக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்திருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார், 21 வயதுடைய தாயும் 02 வயதுடைய சிறுவனும் உயிரிழந்துள்ளனர் எனக் கூறியுள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் கணவர் கடந்த சில நாள்களுக்கு முன்பு வீட்டை விட்டு வெளியே நியமை தெரியவந்தது.

சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் அலபத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# ஜனவரி 04 உயர்தரப் பரீட்சை ஆரம்பம் மேலதிக வகுப்புகள் நேற்று முதல் தடை

கொழும்பு, டிசெ. 30
2023 க.பொ.த உயர்தரப் பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்புகளை நடத்தும் காலம் நேற்று நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைந்தது என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள், விரிவுரைகள் உள்ளிட்டவற்றுக்கு நேற்று நள்ளிரவு 12 மணி முதல் பரீட்சை நிறைவடையும் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை தொடர்பான மாதிரி வினாத்தாள் உள்ளிட்ட வினாப்பத்திரங்களை அச்சிடுதல், அவற்றை விநியோகித்தல், பரீட்சை வினாத்தாள்களின் வினாக்களை வழங்குவதாக அல்லது அதற்கு சமமான வினாக்களை வழங்குவதாக போஸ்டர்கள், பேனர்கள், கையேடுகள் ஆகியவற்றை அச்சு அல்லது இலத்திரனியல் ஊடகங்களின் ஊடாக பிரசாரம் செய்யவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை மீறி செயற்படும் நபர்கள் அல்லது நிறுவனங்கள் தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையம், பொலிஸ் தலைமையகம் அல்லது தமது திணைக்களத்திற்கு அறியத்தருமாறு பரீட்சைகள் திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை 2024 ஜனவரி 04 ஆம் திகதி முதல் ஜனவரி 31 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. (அ)

# 2 மாணவர்களுடன் விடுதியில் தங்கியிருந்த ஆசிரியர் கைது!

கொழும்பு, டிசெ. 30
எப்பாவல நகரிலுள்ள விடுதி ஒன்றில் இரண்டு பாடசாலை மாணவர்களுடன் சந்தேகத்திற்கிடமான முறையில் தங்கியிருந்த ஆசிரியர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

51 வயதுடைய விளையாட்டு ஆசிரியர் ஒருவர் எப்பாவல பொலிஸாரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆசிரியர் தனது பாடசாலையில் தரம் 08 இல் கல்வி கற்கும் இரு மாணவர்களுடன் விடுதியில் தங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 27ஆம் திகதி கைப்பந்து பயிற்சிக்காக இரு மாணவர்களையும் அழைத்துச் செல்வதாக பெற்றோருக்கு அறிவித்ததையடுத்து அநுராதபுரம் பொது விளையாட்டு மைதானத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன் தினம் அழைத்துவரப்பட்ட இரண்டு மாணவர்களையும் அவர்களது வீடுகளுக்கு திருப்பி அனுப்பாமல் விடுதியில் அடைத்து வைத்திருப்பதாக நபர் ஒருவர் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட ஆசிரியரை தம்புத்தேகம நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாக எப்பாவல பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# யுக்திய நடவடிக்கையில் மேலும் 1,467 பேர் கைது!

கொழும்பு, டிசெ. 30
யுக்திய நடவடிக்கையின் கீழ், நேற்று முன் தினம் வியாழக்கிழமை காலை முதல் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணிவரை மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் 1,467 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

460 கிராம் ஹெரோயின், 653 கிராம் ஐஸ் போதைப்பொருள், 3 கிலோ 637 கிராம் கஞ்சா, 103,793 கஞ்சா செடிகள், 342 கிராம் மாவா மற்றும் 562 போதை மாத்திரைகளும் இந்த நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்டன.

இவர்களில் போதைக்கு அடிமையான 51 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# 70 இலட்சம் கோவிட் தடுப்பூசிகளை அழிப்பதற்கு முயற்சி முன்னெடுப்பு

## குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு

கொழும்பு, டிசெ. 30
நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 70 இலட்சம் கோவிட் தடுப்பூசிகளை அழிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்து வைத்திய மற்றும் சிவில் உரிமைகள் தொழிற்சங்கத்தினால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தத் தொழிற்சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவிக்கையில்-

சீனாவிலிருந்து நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 70 இலட்சம் கொரோனா தடுப்பூசிகளை அழிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றின் பெறுமதி 70 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

நாட்டில் உரிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படாமல் வரை முறையை மீறி இவை கொள்வனவு செய்யப்பட்டதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

அத்துடன் அந்த தடுப்பூசிகளின் தரம் பரிசோதிக்கப்பட்டதா என்றும் நாம் கேள்வி எழுப்புகிறோம்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஊடாக உரிய தரத்துடன் கூடிய கொவிட் தடுப்பூசிகள் இலவசமாக இலங்கைக்கு வழங்கப்படவிருந்தன. அதனையும் மீறி சீனாவிலிருந்து தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

தடுப்பூசியொன்று 10 டொலர் என்ற அடிப்படையில் யாருடைய தேவைக்காக கொள்வனவு செய்யப்பட்டது? அப்போது அமைச்சராக இருந்த பவித்ரா வன்னியாராச்சி உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ வைத்திய மற்றும் சிவில் உரிமைகள் தொழிற்சங்க அமைப்பின் தலைவர் எழுபது இலட்சம் கொவிட் தடுப்பூசிகள் 70 மில்லியன் டொலர் பெறுமதி அழிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன-என்றார். (அ)

# திருச்சபைக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்க டிரானுக்கு ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளாரா?

## கத்தோலிக்க திருச்சபை கேள்வி

கொழும்பு, டிசெ. 30

**கர்தினால் மல்கம் ரஞ்சித் மற்றும் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளாரா என கொழும்பு மறைமாவட்டத்திற்கான தகவல் தொடர்பு பணிப்பாளர் பேச்சாளர் ஜூட் கிறிசாந்த பெர்ணான்டோ கேள்வி எழுப்பியுள்ளார்.**

உயிர்த்தஞாயிறு தாக்குதல் குறித்து அரசாங்கம் உரிய முறையில் விசாரணைகளை முன்னெடுக்கவில்லை என நாங்கள் குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கான நியாயமான காரணங்கள் உள்ளன என அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு பல நபர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் உட்பட பலபரிந்துரைகளை முன்வைத்துள்ளது என தெரிவித்துள்ள ஜூட் கிறிசாந்த பெர்ணான்டோ ஆனால் அரசாங்கம் இவை எவற்றையும் நடைமுறைப்படுத்தவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பல விடயங்கள் குறித்து பொலிஸாரும் புலனாய்வு பிரிவினரும் கவனம் செலுத்தவில்லை நிலைமை இவ்வாறானதாக காணப்படும் போது நாங்கள் திருப்தியடைந்துள்ளோம் என எவ்வாறு தெரிவிக்க முடியும்.

பதவி உயர்வு பெற்றுள்ள பொலிஸ்மா அதிபர்கள் யார் என பார்த்தீர்கள் என்றால் அவர்களில் எவரும் கத்தோலிக்கர்கள் இல்லை. நாங்கள் கத்தோலிக்கர்கள் எவரையும் பொலிஸ்மா அதிபராக நியமிக்குமாறு வேண்டுகோள் விடுக்கவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு தென்னக்கோனும் ஜெயவர்த்தனவும் தங்கள் பொறுப்புகளை கடமைகளை அலட்சியம் செய்தனர் என தெரிவிக்கின்றது என்றே தெரிவிக்கின்றோம்.

அவர்கள் உரிய முறையில் பணியாற்றியிருந்தால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தவிர்த்திருக்க முடியும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதன் காரணமாகவே நாங்கள் அவர்களின் நியமனங்களை எதிர்க்கின்றோம்.

திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டகுழுவினருடன் மததலைவர்களுடன் உறவுகளை பேணுகின்றனர். அவர்கள் குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் பொலிஸ் அதிகாரிகளை விமர்சிக்கின்றனர். நாட்டிலிருந்து போதைப்பொருள் ஆபத்தை ஒழிப்பதற்கான கத்தோலிக்க திருச்சபை பல திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு முன்னதாக போதைப்பொருள் பிரச்னைக்கு அரசாங்கம் தீர்வை காணவேண்டும் என வலியுறுத்தி நாங்கள் பேரணிகளை முன்னெடுத்திருந்தோம். போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு உதவுவது குறித்து ஆராய்வதற்காக கத்தோலிக்க மதகுரு ஒருவரை பேராயர் நியமித்துள்ளார். இதனை விர கத்தோலிக்க திருச்சபை புனர்வாழ்வு நிலையத்தை நடத்துகின்றது இவை அனைத்தையும் செய்யும் நாங்கள் ஏன் போதைப்பொருள் கும்பல்களுடன் தொடர்பை பேணவேண்டும்?

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கர்தினாலுக்கு எதிராகவும் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராகவும் சமீப காலங்களில் பல விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

விக்கிரமசிங்க எதனையும் செய்யவில்லை. கர்தினாலுக்கு எதிராக டிரான் அலஸ் கடுமையான விமர்சனங்களை மேற்கொள்வதற்கு அனுமதியளிக்கின்றார்-என்றார். (அ)

# குழந்தைகளுக்கு அம்மை தடுப்பூசி!

கொழும்பு, டிசெ. 30

6 முதல் 9 மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு அம்மை நோயிற்கான தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார மேம்பாட்டு பணியகம் தனது உத்தியோகப்பூர்வ முகநூல் பக்கத்தில் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

குழந்தைகள் மத்தியில் அம்மை நோய் அதிகளவில் பரவி வரும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்த திட்டம் எதிர்வரும் ஜனவரி 06 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மை நோயாளர்கள் அதிகமாக பதிவாகியுள்ள 9 மாவட்டங்களை இலக்கு வைத்து இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது,

இந்த நிலையில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, யாழ்ப்பாணம், குருநாகல் மற்றும் கல்முனை ஆகிய மாவட்டங்களில் தடுப்பூசி ஏற்றும் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

தொற்று நோய்க்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் 6 திகதி காலை 9:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை அருகிலுள்ள தடுப்பூசி மையங்களுக்குச் சென்று, 6 முதல் 9 மாதங்களுக்கு இடையிலான குழந்தைகளுக்கு இந்த தடுப்பூசியை செலுத்துக் கொள்ளுமாறு பெற்றோருக்கு சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

# இந்தியப் பெருங்கடலில் நில அதிர்வுகள் இலங்கைக்கு எவ்வித பாதிப்பும் இல்லை

கொழும்பு, டிசெ. 30

இந்தியப் பெருங்கடலின் மாலைதீவுக்கு அருகில் நேற்று காலை நான்கு நில அதிர்வுகள் பதிவாகியுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

ரிச்டர் அளவுகோலில் 4.8 ஆக முதலாவது நில அதிர்வும், 5.8 ஆக இரண்டாவது நில அதிர்வும் பதிவாகியுள்ளதாக அந்த பணியகம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், ரிச்டர் அளவுகோலில் 5.2 மற்றும் 5.0 அளவிலான மேலும் இரண்டு நில அதிர்வுகளும் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அழிப்பேரலை எச்சரிக்கை விடுக்கப்படவில்லை என்பதுடன், இதனால் இலங்கைக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# புதுக்குடியிருப்பில் வாகன விபத்து; உயர்தர வகுப்பு மாணவி படுகாயம்

முல்லைத்தீவு, டிசெ. 30

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் துவிச்சக்கர வண்டியில் வீதியினை கடக்க முற்பட்ட மாணவி மீது டிபெண்டர் வாகனம் மோதியதில் மாணவி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றது.

பரந்தன் வீதியில் இருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்ற டிபெண்டர் வாகனம் வள்ளிபுனம் பகுதியில் சைக்கிளில் வீதியை கடக்க முற்பட்ட மாணவி மீது மோதியதில் மாணவியொருவர் படுகாயமடைந்ததாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த 16 வயதுடைய பாடசாலை மாணவி வள்ளிபுனம் பகுதியைச் சேர்ந்தவர். இவர் காலில் காயம் ஏற்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

குறித்த விபத்தினை ஏற்படுத்திய களுத்துறையைச் சேர்ந்த 54 வயதுடைய வாகனத்தின் சாரதி புதுக்குடியிருப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். (அ)

# மருந்து மோசடிகளுக்கு கெஹலியவே பொறுப்பு

## ராஜித சேனாரத்ன வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 30

நாட்டில் இடம்பெற்ற மருந்து மோசடிக்கு முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவே பொறுப்புக் கூற வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மருந்து கொள்வனவை சாதாரண நடைமுறையின் கீழ் செயற்படுத்த முடியாது. மக்களின் உயிரோடு நேரடித் தொடர்புடைய மருந்துகளை உற்பத்தி செய்வதற்கும் கொள்வனவு செய்வதற்கும் உரிய நடைமுறைகளைப் பின்பற்றியிருக்கவேண்டும்.

நாட்டில் இடம்பெற்ற மருந்து மோசடிக்கு அப்போதைய அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவே காரணம். அவரே இதற்கு பொறுப்புக் கூற வேண்டும்.

அமைச்சர் இடமளித்திருக்காவிட்டால் இவ்வளவு பெரிய மோசடி இடம்பெற்றிருக்காது. அமைச்சரின் உத்தரவின்பேரில் போலியான மருந்துகள் விநியோகிக்கப்பட்டதாக விநியோகஸ்தர் நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளார்.

அந்த விடயத்தை மூடி மறைப்பதற்காக வேறு பல விடயங்களை கெஹலிய ரம்புக்வெல ஊடகங்களுக்கு கூறிவருகிறார்.

நான் சுகாதார அமைச்சராக இருந்த காலத்தில் பணியாற்றிய 90 வீதமான அதிகாரிகளே தற்போதும் அமைச்சில் இருக்கிறார்கள். அப்போது அவர்கள் ஊழல் மோசடியில் ஈடுபடவில்லை.

அதன் பின்னர் அவர்கள் அவ்வாறு மோசடியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றால் அமைச்சரே அதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்.

நாட்டில் இன்று 253 மருந்துவகைகளுக்கு தட்டுப்பாடு காணப்படுகிறது. அடுத்த மாதமாகும்போது அந்த எண்ணிக்கை 365 ஆக உயர்வடையவுள்ளது. அது மாத்திரமல்ல 75 வீதமான மருத்துவ உபகரணங்கள் வைத்தியசாலைகளில் கிடையாது-என்றார். (அ)

# களுத்துறை சிறையில் சுகவீனமுற்ற மற்றுமொரு கைதியும் உயிரிழந்தார்!

கொழும்பு, டிசெ. 23

களுத்துறை சிறைச்சாலையில் கைதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை சுகயீனமுற்றிருந்த குறித்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்ட நிலையில் சுகயீனமடைந்து உயிரிழந்துள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி திஸாநாயக்க தெரிவித்தார்.

மீண்டும் அவர் நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளார்.

இவர் ஹெரோயின் போதைப்பொருள் பாவித்த குற்றத்திற்காக சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தார் என சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் களுத்துறை சிறைச்சாலையில் கைதி ஒருவர் நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 'பொடிமெனிக்கே' தடம் புரண்டது

கொழும்பு, டிசெ. 30

பதுளை மற்றும் ஹாலி-எல ரயில் நிலையங்களுக்கிடையில் நேற்று வெள்ளிக்கிழமை ரயில் தடம் புரண்டதால், மலையக ரயில் சேவைகள் தடைப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி ரயில்வே கட்டுப்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

பொடிமனிக்கே ரயிலின் இயந்திரப் பகுதியும் பின் பெட்டியுமே இவ்வாறு தடம் புரண்டுள்ளது.

மேலும், அப்பகுதியில் நிலவும் மோசமான காலநிலை மற்றும் ரயில் பாதையில் சேறும் சகதியுமாக காணப்படுவதால், ரயில்வே போக்குவரத்தில் தடைகள் ஏற்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி ரயில்வே கட்டுப்பாட்டு அறை மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# இலங்கையின் அனைத்து துறைமுகங்களையும் இந்தியாவுடன் இணைக்கும் திட்டம் விரைவில்!

## அமைச்சரிடம் கூறினார் இந்தியத் தூதுவர்

**கொழும்பு, டிசெ. 30**

**இலங்கையின் அனைத்து துறைமுகங்களையும் இந்தியாவுடன் இணைக்கும் பயணிகள் படகுச் சேவைகளை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளதாக இலங்கைக்கான புதிய இந்திய தூதுவர் தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுடன் நேற்று முன் தினம் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை, தலைமன்னார் மற்றும் திருகோணமலை துறைமுகங்கள் உட்பட பல்வேறு மூலோபாய திட்டங்களின் முன்னேற்றம் குறித்து அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது விரிவாக ஆராயப்பட்டடது.

இதன்போது கடல்சார் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைகளை முன்னேற்றுவதற்கும், இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வதற்கும் இந்திய அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை புதிய இந்திய தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது கடல்சார் மற்றும் விமான சேவைத் துறைகளில் ஈடுபட ஆர்வமுள்ள இந்திய முதலீட்டாளர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக இருப்பதாக அமைச்சர் டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கப்பல் மற்றும் சிறிய கைவினைக் கட்டுமானத் தொழில்களுக்கான சாத்தியக் கூறுகளை வலியுறுத்தி, திருகோணமலை துறைமுகப் பகுதியில் முதலீட்டு வாய்ப்புகளை அவர் முன்னிலைப்படுத்தியுள்ளார். (அ)

# விஜயகாந்திற்கு நேரில் சென்று அஞ்சலி செய்த கிழக்கு ஆளுநர்



கொழும்பு, டிசெ. 30

மறைந்த தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் தலைவர் கப்டன் விஜயகாந்திற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

இதன்போது கப்டனுடன் பழகிய நாட்களை நினைவு கூர்ந்ததுடன், விஜயகாந்தின் இழப்பால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

இதேவேளை, உடல் நலக்குறைவால் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தேமுதிக தலைவர் கேப்டன் விஜயகாந்த் உயிரிழந்தையடுத்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இரங்கல் செய்தி ஒன்றையும் வெளியிட்டிருந்தார். (அ)

# இணையத்தில் பரவிய காணொலி காரணத்தை வெளியிட்ட பொலிஸ்!

கொழும்பு, டிசெ. 30

குருநாகலில் சந்தேகநபர் ஒருவரை கைது செய்யும் போது இரண்டு அதிகாரிகள் பலத்தை பயன்படுத்துவதை சித்தரிக்கும் காணொளி சமூக ஊடகங்களில் பரவிவருவது தொடர்பில் பொலிஸ் விளக்கமளித்துள்ளது.

குறித்த காணொளியில் இரண்டு காவல்துறையினர், சந்தேக நபர் ஒருவரை தரையில் கிடத்தி கயிற்றால் பிணைப்பது காட்டப்படுகிறது.

இதன்போது ஒரு அதிகாரி சந்தேக நபரின் மீது அமர்ந்துள்ளார், மற்றவர் சந்தேக நபரின் கால்களை கயிற்றால் பிணைக்கிறார்.

இந்தநிலையில் டிசெம்பர் 26 ஆம் திகதி குருநாகல் டோரடியாவ பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவ குறிப்பிட்டுள்ளார்.



போதைப்பொருள் வைத்திருந்தமை மற்றும் திருட்டுகள் என சந்தேகிக்கப்படும் குற்றச்சாட்டின் பேரில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் சந்தேகநபரை கைது செய்ததாக அவர் கூறியுள்ளார்.

காணொளியில் காட்டப்படுபவர், போதைப்பொருளுக்கு அடிமையானவர், போதைப்பொருள் விற்பனை மற்றும் திருட்டுகளில் தினசரி ஈடுபட்டு வந்தவராவார்.

கைது செய்யப்பட்ட போது சந்தேக நபரின் வசம் 2 கிராம் ஹெராயின் இருந்தது.

இந்த நிலையில் கைது செய்யப்பட்டபோது சந்தேக நபரைக் கட்டுப்படுத்த முயன்ற அதிகாரிகள்,அவரைத் தாக்க முற்படவில்லை” என்று பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# புதுக்குடியிருப்பில் கசிப்பு வேட்டை




முல்லைத்தீவு, டிசெ. 30

புதுக்குடியிருப்பு - இடைக்கட்டு பகுதியில் இரண்டு சட்ட விரோத கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகையிடப்பட்டுள்ளதுடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படும் 810 லீற்றர் கோடாவுடன் சந்தேக நபரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 3 மணியளவில் இரண்டு கசிப்பு உற்பத்தி நிலையங்களும் முற்றுகையிடப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இடைக்கட்டு பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் செயற்படுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹெரத் தலைமையிலான பொலிஸார் மேற்கொண்ட விஷேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 14 பரல், 810 லீற்றர் கோடா, 60 லீற்றர் கசிப்பினையும் அப்பகுதியை சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# வற் வரி திருத்தத்தால் இலங்கை எதிர்கொள்ளவுள்ள சிக்கல்நிலை!

கொழும்பு, டிசெ. 30

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் வற் வரி திருத்தம் அமுலாகும் போது, நாட்டின் பணவீக்கம் சடுதியாக அதிகரிக்கும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

1.5 சதவீதமாக தற்போது குறைவடைந்துள்ள நாட்டின் பணவீக்கமானது அடுத்த வருடம் 5 சதவீதமாக உயரக்கூடும் என எதிர்ப்பார்க்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஜானக்க எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட மக்களின் அத்தியாவசிய நுகர்வு பொருட்கள் மற்றும் சேவைகளில் வற் வரி தாக்கம் செலுத்துவதால் இந்த நிலை ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள 15 சதவீத வற் வரியானது, 18 சதவீதமாக எதிர்வரும் ஜனவரி மாதம் 1ஆம் திகதி முதல் அதிகரிக்கப்படவுள்ளது.

இந்தநிலையில், தற்போது குறித்த வரி விதிப்பில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ள 69க்கும் மேற்பட்ட பொருட்களுக்கும் அடுத்த வருடம் முதல் வற் வரி அறவிடப்படவுள்ளது.

அதில் எரிவாயு, எரிபொருள், மருத்துவ உபகரணங்கள், கைப்பேசிகள், இரசாயன உரங்கள் உள்ளிட்ட பல பொருட்கள் அடங்குகின்றன.

இதனால் பணவீக்கம் சடுதியாக அதிகரிக்கும் நிலை காணப்படுவதாக இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஜானக்க எதிரிசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொதுமக்களுக்கு, வற் வரி தாக்கத்தினை குறைக்கும் நோக்கில் எரிவாயு மற்றும் எரிபொருளுக்கு தற்போது 7.5 சதவீதமாக அறவிடப்படும் துறைமுகம் மற்றும் விமான மேம்பாட்டு வரி எதிர்வரும் 1ஆம் திகதி முதல் நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டில் கொரோனா தொற்றினால் ஆபத்து இல்லையென கூறமுடியாது

## அறிகுறிகளுடன் பலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

கொழும்பு, டிசெ. 30

கொவிட் தொற்று பரவல் தொடர்பில் அரசாங்கத்தின் கருத்து எதுவாக இருந்தாலும், மக்கள் தமது பாதுகாப்பு தொடர்பில் மிகுந்த அக்கறையுடன் இருக்க வேண்டுமென பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன கூறுகையில்-

உலகளவில் கொவிட் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை மற்றும் தனிநபர் இறப்புகள் மீண்டும் அதிகரித்துள்ளன. புதிய கொவிட் திரிபு இலங்கைக்குள் பிரவேசித்துள்ளதை விசேட நிபுணர்களும், சுகாதாரத் திணைக்களங்களும் உறுதிப்படுத்தியுள்ளன.

இது தொடர்பில் அண்டை நாடான இந்தியா அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்தியாவில் தொற்றுநோய் பரவல் அதிகரித்துள்ளது. புதிய கொவிட் திரிபு குறித்து அடிமட்டத்தில் எந்தவொரு ஆராய்வும் செய்யப்படவில்லை. இருப்பினும், இந்த நாட்களில், சுவாசக் கோளாறுகள் உள்ள நோயாளிகள் அதிகரித்துள்ளனர்.

கொவிட் 19 தொற்று உள்ளவர்கள் என சந்தேகிக்கக்கூடிய பல நோயாளிகள் நாட்டில் காணப்படுகின்றனர். அதனால் புதிய திரிபு ஓரளவுக்கு நாட்டில் பரவி வருகிறது என்பது தெளிவாகிறது. ஆகவே, எந்த ஒரு நபரும் ஆபத்து இல்லை என்று சொல்ல முடியாது.

இந்த விவகாரம் குறித்து அரசு தரப்பில் முறையான விசாரணை நடத்த வேண்டும். பின்னர் இதுகுறித்து சுகாதாரத்துறைக்கு தகவல் தெரிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வாறாயினும், பொதுமக்களும் இவ்விடயத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுவதும் இந்த நேரத்தில் அவசியம். விமான நிலையத்தில் தனிமைப்படுத்தல் தொடர்பான எந்த செயல்முறையும் இல்லை. அதனால் நாட்டுக்குள் தொற்றுநோய்கள் நுழைய வாய்ப்பு உள்ளது. எனவே அனைவரும் இது குறித்து கவனமாக இருக்க வேண்டும்-என்றார். (அ)

# கஞ்சிகுடிச்சாறில் கரடி தாக்கியதில் தந்தை, மகன் வைத்தியசாலையில்!

அம்பாறை, டிசெ. 30

**திருக்கோவில் கஞ்சிகுடிச்சாறு காட்டுப் பிரதேசத்தில் கரடி தாக்கியதில் தந்தையும் மகனும் படுகாயமடைந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது**

நேற்று வெள்ளிக்கிழமை காலை கஞ்சிகுடிச்சாறு ரூபஸ் குளம் காட்டு பகுதியில் தந்தையும் மகனும் விறகு எடுப்பதற்காக சென்றவேளை இருவரையும் கரடி தாக்கியதால் தலை, காலில் பாரிய காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து இருவரும் உடனடியாக திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர் .

திருக்கோவில் 04 காயத்திரி கிராமத்தைச் சேர்ந்த தந்தையும் மகனுமே இவ்வாறு கரடி தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். (அ)

# திருமலை மாணவர்களுக்கு உயிர்காப்பு பயிற்சி வழங்கல்

திருமலை, டிசெ. 30

திருகோணமலை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சமன் சிகேராவின் ஆலோசனைக்கமைய திருகோணமலை பொலிஸ் உயிர்காப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி ஐ. ஜீ.டபிள்யூ.லக்மால் தலைமையிலான பொலிஸ் தற்காப்பு படை வீரர்களினால் மாணவர்களுக்கு உயிர்காப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

திருகோணமலை பிராந்தியத்தில் 2000 மூவின பாடசாலை மாணவ மாணவிகளுக்கு உயிர்க்காப்பு பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)



# அம்பாறையில் கனமழை!

அம்பாறை, டிசெ. 30

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களான நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, பாண்டிருப்பு, மருதமுனை, பெரியநீலாவணை, துறைவந்தியமேடு போன்ற தாழ்நில பகுதிகளில் வெள்ள நீர் பெருக ஆரம்பித்துள்ளது.

தொடர்ச்சியாக கன மழை பெய்வதால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் நாளாந்த கூலி வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு தாழ் நிலப் பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியிருப்பதால் டெங்கு நோய் பெருகக்கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளது.

அனர்த்தங்கள் நடைபெறும் இடங்களுக்கு கூட்டம் கூட்டமாக பார்வையிடச் செல்வதை தவிர்த்து பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (அ)

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 352 மாணவர்கள் மட்டக்களப்பில் கௌரவிப்பு

மட்டக்களப்பு, டிசெ. 30

கடந்த 2023 நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்று சித்தி பெற்ற மட்டக்களப்பு வலய மாணவர்கள் 352 பேருக்கு கௌரவம் வளங்கும் நிகழ்வு மட்டக்களப்பு புனித சிசில்யா தேசிய மகளில் கல்லூரியில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.



கல்வித் துறையில் சதனைபடைக்க மாணவர்களை ஊக்குவிக்குமுகமாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய திருமதி. ஜே.ஜே. முரளிதரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

இதன்போது மட்டக்களப்பு கல்வி வலயத்தின் 3 கோட்டங்களிலுமுள்ள பாடசாலைகள் மூலமாக இப்பரீட்சைக்குத் தோற்றி வெற்றி பெற்ற 352 மாணவ மாணவிகள் கௌரவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு வலயக் கல்விப் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக திறந்த பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் கே. ஞானரெட்னம், கௌரவ அதிதியாக ஒய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் இரவிசந்திரா மற்றும் உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள், ஆசிரியர் ஆலோசகர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# டெங்கு நுளம்பு ஒழிப்பு தொடர்பாக மட்டக்களப்பில் கலந்துரையாடல்

மட்டக்களப்பு, டிசெ. 30

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நுளம்புப் பரவலைக் கட்டுப்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஆ. நவேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மாவட்ட பிராந்திய பிரதி சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் ஆர். நவலோஜிதன் டெங்குப் பரவலைக் கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை வழங்கினார்.



இதன்போது நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களை அடையாளம் காணுதல், அவற்றை துப்பரவு செய்து நிலைபேறானதாக தொடர்ந்து அவ்விடங்களை நுளம்புப் பரவலில் இருந்து பாதுகாத்தல், அதற்காக எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பன தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன் பிராந்திய தொற்றுநோயியலாளர் வைத்தியர் கார்த்திகா டெங்கு நுளம்புப் பரவலில் மாவட்டத்தின் நிலைப்பாடு தொடர்பாகத் தெளிவுபடுத்தினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் டிசம்பர் மாதத்தில் ஏறாவூர் நகர் மற்றும் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவு டெங்குத் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதுடன் மட்டக்களப்பு நகர், களுவாஞ்சிகுடி மற்றும் வாழைச்சேனை பொதுச் சுகாதார வைத்தியர் பிரிவுகளிலும் காத்தான்குடியிலும் இதன் தாக்கம் தொடர்ந்தும் காணப்படுகின்றது.

ஏறாவூர் நகரில் வெற்றுக் காணிகள் மற்றும் மூடப்பட்டு ஆள் நடமாட்டமற்ற வீடுகள் அதிகம் காணப்படுவதாகவும் அவற்றின் உரிமையாளர்கள் வெளிநாடுகளில் வசிப்பதால் பராமரிப்பின்றிக் காணப்படுகின்றன. இவை டெங்கு நுளம்புகளின் உருவாக்கத்திற்கு சாதகமாகக் காணப்படுவதாகவும் அது குறித்து கவனம் செலுத்துமாறும் அறிவுரை வழங்கப்பட்டது.

வவுணதீவு மற்றும் வாகரைப் பிரதேசங்கள் டெங்குத் பாதிப்பு மிகவும் குறைந்த இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபைகளின் செயலாளர்கள், பொதுச் சுகாதார வைத்தியர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மாவட்ட செயலகம், வலயக் கல்வி அலுவலகங்களின் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் தாழ்நிலங்கள் வெள்ளத்தில்



மட்டக்களப்பு, டிசெ. 30

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக தாழ்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

நேற்று முன் தினம் முதல் கன மழை பெய்து வருவதன் காரணமாக, மட்டக்களப்பு நகரின் பல இடங்களும் வெள்ளத்தில் மூழ்கின.

இருதயபுரம், ஜெயந்திபுரம், கூழாவடி, மாமாங்கம், உப்போடை, ஊறணி உட்பட பல பகுதிகளில் வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கின.

இதேநேரம் மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான குளங்களில் ஒன்றான நவகிரிகுளத்தின் நீர்மட்டம் வான்பாயும் நிலைமை காரணமாக இரண்டு வான்கதவுகள் ஐந்து அடி திறக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வாவியினை அண்டியுள்ள மற்றும் நவகிரி ஆற்றுப்படுக்கையினை அண்டியுள்ள பகுதி மக்களை அவதானமாக இருக்குமாறு போரதீவுப்பற்று பிரதேச செயலாளரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் மினிசூறாவளி காரணமாக சேதமடைந்த வீடுகளை போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் ரங்கநாதன் நேரில் சென்று பார்வையிட்டதுடன் சேத நிலைமைகள் தொடர்பிலும் மதிப்பீடுகளை மேற்கொண்டார். (அ)

# தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட்; இந்தியா இன்னிங்ஸால் தோல்வி



செஞ்சூரியன், டிசெ. 30

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் மற்றும் 38 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்திய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்கவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதில் இரு அணிகளுக்கும் இடையிலான இருபது - 20 தொடர் 1-1 என சமனில் முடிந்தது. ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் இந்திய அணி கைப்பற்றியது. இதைய டுத்து இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் போட்டி செஞ்சூரியனில் நடைபெற்றது.

இதில் முதலாவதாக களமிறங்கிய இந்திய அணி தென்னாபிரிக்காவின் அபார பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்து தடுமாறியது. இறுதியில் இந்திய அணி 67.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 245 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இந்தியா தரப்பில் ராகுல் 101 ஓட்டங்கள் எடுத்தார்.

இதையடுத்து தென்னாபிரிக்க அணி தனது முதல் இன்னிங்ஸை ஆடியது. இதில் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்க அணி 66 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 256 ஓட்டங்கள் எடுத்தது. இந்த நிலையில் 3 நாள் ஆட்டம் நேற்று தொடங்கியது. இதில் தொடர்ந்து ஆடிய டீன் எல்கர் 185 ஓட்டங்களுக்கு ஷர்துல் தாகூர் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் சிறிது நேரம் தாக்கு பிடித்த ஜெரால்ட் கோட்ஸி 19 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இறுதியில் தென்னாரிக்கா அணி 408 ஓட்டங்கள் குவித்து சகல விக்கெட்களையும் இழந்தது. சிறப்பாக ஆடிய மார்கோ ஜோன்சன் 84 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஜஸ்பிரீத் பும்ரா 4 விக்கெட்களை கைப்பற்றினார்.

இதையடுத்து 2-வது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணியின் தொடக்க வீரர்களான யஷஸ்வி ஜெய்ஸ்வால் 5 ஓட்டங்களிலும் கப்டன் ரோகித் சர்மா ஓட்டம் ஏதும் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். அடுத்து களமிறங்கிய ஷுப்மன் கில் 26 ஓட்டங்களில் விக்கெட்டை பறிகொடுத்தார்.

ஒருபக்கம் விக்கெட்கள் சரிந்த நிலையில், மறுபுறம் விராட் கோலி நிலைத்து நின்று பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். எனினும், இந்திய அணி 131 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்தது. இதன் மூலம் தென்னாபிரிக்கா அணி இந்தியாவை இன்னிங்ஸ் மற்றும் 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இந்தியா சார்பில் சிறப்பாக ஆடிய விராட் கோலி 76 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார். தென்னாபிரிக்கா சார்பில் சிறப்பாக பந்துவீசிய பர்கர் 4 விக்கெட்களை கைப்பற்றிய நிலையில் யென்சென் 3 விக்கெட்களையும் ரபாடா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

# பாகிஸ்தானுடனான டெஸ்ட்; தொடர் அவுஸ்திரேலியா வசம்!



மெல்பர்ன், டிசெ. 30

பாகிஸ்தான் அணியை இரண்டாவது போட்டியிலும் 79 ஓட்டங்களால் வெற்றி கொண்ட அவுஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் தன் வசமாக்கியது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் சென்று 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இதில் முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி அவுஸ்திரேலிய தொடரில் 1-0 என முன்னிலையில் இருந்தது. இதையடுத்து இந்த இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி கடந்த 26ஆம் திகதி ஆரம்பமானது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் 318 ஓட்டங்களும் பாகிஸ்தான் தனது முதல் இன்னிங்ஸில் 264 ஓட்டங்களும் எடுத்தன. இதையடுத்து 54 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலிய அணி 262 ஓட்டங்கள் எடுத்தது.

இதையடுத்து 317 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய பாகிஸ்தான் அணி 237 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதன் மூலம் 79 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்திய அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

இந்தப் போட்டியில் மொத்தம் 10 விக்கெட்களை கைப்பற்றிய பட் கம்மின்ஸ் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி எதிர்வரும் ஜனவரி 3ஆம் திகதி தொடங்கவுள்ளது. (ஐ)

# டெஸ்ட் அணியில் ஆவேஷ் கான்!



கேப்டவுன், டிசெ. 30

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வேகப்பந்து வீச்சாளர் ஆவேஷ் கான் இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது.

முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 38 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் தென்னாபிரிக்க அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1 - 0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் ஜனவரி 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியில் இளம் வேகப்பந்து வீச்சாளரான ஆவேஷ் கான் சேர்க்கப்பட்டுள்ளாரென இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. (ஐ)

# நியூசிலாந்து - பங்களாதேஷ் இரண்டாவது ரி - 20 இரத்து!



நேப்பியர், டிசெ. 30

நியூசிலாந்து, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது இருபது - 20 போட்டி மழையால் இரத்து செய்யப்பட்டது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடுகிறது.

இதில் முதலாவதாக நடைபெற்ற ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் நியூசிலாந்து அணி கைப்பற்றியது. இதை யடுத்து இந்த இரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ரி -20 தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் முதல் ரி - 20 போட்டியில் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றது. இதையடுத்து இந்த இரு அணிகள் இடையிலான 2ஆவது இருபது - 20 போட்டி காலை 11.40 மணிக்கு (இலங்கை நேரம்) தொடங்கியது. நாணய்ச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் களத்தடுப்பை முதலில் தெரிவு செய்தது.

இதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 11 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 72 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழை பெய்ததால் போட்டி தடைப்பட்டது. மழை நின்ற பின்னர் ஆட்டம் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் மழை தொடர்ந்து பெய்ததால் ஆட்டம் இரத்து செய்யப்பட்டது.

இதையடுத்து 3 போட்டிகள் கொண்ட ரி -20 தொடரில் பங்களாதேஷ் அணி 1-0 என முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான கடைசி ரி - 20 போட்டி வரும் 31ஆம் திகதி நடைபெறுகிறது. (ஐ)

# கிரிக்கெட் வரலாற்றில் கோலி புதிய சாதனை!



செஞ்சூரியன், டிசெ. 30

146 ஆண்டுகால கிரிக்கெட் வரலாற்றில் இந்திய அணியின் விராட் கோலி புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளார்.

இந்திய அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான கடந்த 26ஆம் திகதி ஆரம்பமானது.

இந்தப் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய அணி தடுமாறிக் கொண்டிருந்தபோது, விராட் கோலி மட்டும் நிலைத்து நின்று சிறப்பாக விளையாடினார். அவர் 82 பந்துகளில் 76 ஓட்டங்கள் எடுத்தார். அப்போது நடப்பாண்டில் சர்வதேச போட்டிகளில் அவர் அடித்த ஓட்டங்கள் 2,000ஐ கடந்தது. இதன் மூலம் 7 வெவ்வேறு ஆண்டுகளில் 2,000 ஓட்டங்களை கடந்த முதல் வீரர் என்ற சாதனையை கோலி படைத்துள்ளார்.

இதற்கு முன்பு 2012 (2,186 ஓட்டங்கள்), 2014 (2,286 ஓட்டங்கள்), 2016 (2,595 ஓட்டங்கள்), 2017 (2,818 ஓட்டங்கள்), 2018 (2,735 ஓட்டங்கள்) மற்றும் 2019 (2,455 ஓட்டங்கள்) ஆகிய ஆண்டுகளில் 2,000 ஓட்டங்களை கோலி கடந்திருந்தார்.

146 ஆண்டுகால சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் வேறு எந்த வீரரும் இப்படியொரு சாதனையை படைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மின் கட்டணத்தை குறைக்க உத்தேசம்

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

கொழும்பு, டிசெ. 30

**மின் கட்டணத்தை எதிர்வரும் பெப்ரவரி மாதம் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சேர்பெறுமதி (வற் )வரி மின் கட்டணத்துக்கு தாக்கம் செலுத்தாது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்தார்.**

மின் கட்டண திருத்தம் தொடர்பில் வினவியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின் கட்டண திருத்தம் தொடர்பில் கடந்த 20 ஆம் திகதி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம். நீர்மின்னுற்பத்தி, நிலக்கரி மற்றும் எரிவாயுவுடனான மின்னுற்பத்தி மற்றும் அதற்கான செலவு தொடர்பான தரவுகளை மின்சார சபையிடம் கோரியுள்ளோம்.எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி சகல தரவுகளையும் வழங்குவதாக மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

மின்கட்டண திருத்தம் தொடர்பில் மின்சார சபை முன்வைக்கும் யோசனைகளை முன்னிலைப்படுத்தி,ஜனவரி மாதம் இறுதி வாரத்தில் மின் கட்டணம் தொடர்பில் பொதுமக்களிடம் கருத்து கணிப்பு கோர தீர்மானித்துள்ளோம்.

மின்சார சட்டத்துக்கமைய மின் கட்டண திருத்தம் தொடர்பான சகல நடவடிக்கைகளும் வெளிப்படையான முறையில் முன்னெடுக்கப்படும்.எதிர்வரும் பெப்ரவரி மாதம் மின் கட்டணத்தை குறைக்க உத்தேசித்துள்ளோம். வற் வரி அதிகரிப்பு மின் கட்டண திருத்தத்தில் தாக்கம் செலுத்தாது-என்றார். (அ)

# கொலன்னாவை ஹோட்டலில் தீ

கொழும்பு, டிசெ. 30

கொலன்னாவை பிரதேசத்தில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றின் 2ஆவது மாடியில் தீ பரவியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ பரவலில் காயமடைந்த ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறனர்.

தீ பரவியமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. தீ பரவலை கட்டுப்படுத்தும் பணியில் தீயணைப்பு படையினர் செயற்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மனைவியை சித்திரவதை செய்த பொலிஸ் கான்ஸ்டபிள் கைதானார்

கொழும்பு, டிசெ. 30

மனைவியை தாக்கிய குற்றச்சாட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனுராதபுரத்தைச் சேர்ந்த 38 வயதான பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர், சந்தேகநபரான பொலிஸ் கான்ஸ்டபிள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இதேவேளை, சந்தேகநபரான பொலிஸ் கான்ஸ்டபிளால் அவரது 13 வயது மகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டாரா என்பது தொடர்பிலும் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அனுராதபுரம் பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் மேற்கொண்டு வருகின்றது. (அ)

# மாணவருக்கு போதைப்பாக்கு விற்ற இளைஞன் சிக்கினார்!

யாழ்ப்பாணம், டிசெ. 30

யாழ்ப்பாணத்தில் மாணவர்களுக்கு, போதை பாக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு ட்பட்ட கல்வியங்காடுப் பகுதியில் இளைஞன் ஒருவர் மாணவர்களுக்கு மாவா போதைப்பாக்கு விற்பனை செய்வதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இளைஞரை கைது செய்தனர்.

கைது செய்த இளைஞனை சோதனையிட்டபோது, அவரது உடைமையில் இருந்து, சுமார் 07 கிலோ மாவா பாக்கை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# சீனாவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதியான இறைச்சி அழிப்பு

கொழும்பு, டிசெ. 30

ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் என்ற நோய் நிலைமை உறுதிப்படுத்தப்பட்ட சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இறைச்சியை இலங்கை சுங்கம் நேற்று முன் தினம் காலை அழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தது.

பன்றி இறைச்சி, சொசேஜஸ் மற்றும் வாத்து இறைச்சி என்பன கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் அனுமதியின்றி சீனாவில் இருந்து இந்த மாதத்தின் முதல் வாரத்தில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

எனினும், இறக்குமதி செய்யப்பட்ட குறித்த இறைச்சி தொகை, சந்தைக்கு விடுவிக்கப்படவில்லை என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்தார்.

# கஞ்சா விற்ற சிறுவன் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 30

வடமராட்சி, வேம்படிப் பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட 14 வயதுச் சிறுவன் ஒருவன் நேற்று முன் தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளான்.

கைது செய்யப்பட்ட சிறுவனின் தாயாரே கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த நிலையில் தாயார் ஏற்கனவே கைது செய்யப்பட்டார் எனக் கூறப்பட்டது.

தாயார் மறைத்து வைத்த பொருளை எடுத்து விற்பனை செய்தான் என சிறுவன் மீது பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளனர். (அ)

# டுபாயில் வேலை வழங்குவதாக விளம்பரம் செய்தவர் கைதானார்

கொழும்பு, டிசெ. 30

டுபாயில் துப்புரவுப் பணியாளராக வேலைகள் வழங்குவதாக முகப்புத்தகத்தில் பதிவுகள் மூலம் விளம்பரம் செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கண்டியில் வைத்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் குருநாகலை தளமாக கொண்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் ஒன்றின் ஊடாக தான் வெளிநாட்டு வேலை வாய்ப்பு வழங்குவதாக கூறி விளம்பரப்படுத்தியுள்ளார்.

சந்தேக நபர் கண்டி, எம்பிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 41 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார். (அ)

# விடுமுறையை குறைப்பதற்கு அரச ஊழியர் எதிர்ப்பு

கொழும்பு, டிசெ. 30

அரச சேவையில் இருந்துவரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அரச ஊழியர்களுக்கு இருக்கும் விடுமுறை நாட்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கான துறைசார் பேற்பார்வைக் குழுவின் பிரேரணைக்கு எமது எதிர்ப்பை தெரிவிக்கிறோம் என அரச மாகாண அரச முகாமைத்துவ சேவை அதிகாரிகளின் சங்கத்தின் செயலாளர் அமில பண்டார தெரிவித்தார்.

அரச ஊழியர்களுக்கு ஒரு வருடத்துக்கு இருந்துவரும் விடுமுறை நாட்களை குறைப்பதற்கு துறைசார் மேற்பார்வைக் குழு முன்வைத்திருக்கும் பிரேரணை தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச சேவையில் இருந்துவரும் பிரச்னைகளுக்கு தீர்வுகாண்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அரச ஊழியர்களுக்கு இருக்கும் வருடத்துக்கு 45 நாட்கள் என்ற விடுமுறை எண்ணிக்கையை 25 நாட்களாக குறைப்பதற்கு துறைசார் மேற்பார்வைக்குழு பிரேரணை முன்வைத்திருக்கிறது. இதனை எமது சங்கம் கடுமையாக எதிர்க்கிறது.

அரச சேவையில் பல பிரச்னைகள் இருந்து வருகின்றன. அந்த பிரச்னைகளுக்கு தீர்வு காண இன்னும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அரச ஊழியர்களை அழுத்தத்துக்கு உள்ளாக்கும் வகையில் விடுமுறை தினங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அத்துடன் தற்காலத்தில் அரச ஊழியர்கள் பல பிரச்னைகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டிருக்கின்றனர். குறிப்பாக பாரிய வரி சுமையை சுமக்க வேண்டி இருக்கின்றனர்.

அதேநேரம் 2016ஆம் வருடத்துக்கு பின்னர் அரச சேவையில் இணைந்துகொள்பவர்களுக்கு ஓய்வூதியம் இல்லாமல் செய்யப்பட்டிருக்கிறது.

தற்போது நிலவும் வாழ்க்கைச்செலவுக்கு ஏற்ற சம்பளம் அரச ஊழியர்களுக்கு இல்லை. வருடத்துக்கு அதிகரிக்கப்படும் சம்பள அதிகரிப்பின் அளவு 350 இற்கும் 400 ரூபாவுக்கும் இடைப்பட்ட தொகையாகும்.

அத்துடன் ஏற்கனவே அரச ஊழியர்களுக்கு இருந்தவந்த சொத்துக்கடன் வழங்கல் நிறுத்தப்பட்டிருப்பதுடன் விதவைகள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான தவணை குறைப்பின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று பரீட்சை நடத்தி வழங்கி வந்த தர உயர்வு வழங்கும் முறை நீக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு இருக்கையில், அரச சேவையில் இருப்பவர்களின் விடுமுறையை குறைப்பதற்கு கொண்டுவந்திருக்கும் பிரேரணைக்கு எமது எதிர்ப்பை தெரிவிக்கிறோம்.

ஓய்வுபெறும் அதிகாரிகளின் ஓய்வூதிய பணிக்கொடை ஒருவருடம் செல்லும்வரை செலுத்துவதை தாமதித்திருக்கிறது.

இவ்வாறு பல பிரச்னைகள் அரச ஊழியர்களுக்கு இருந்துவரும் நிலையில் இவற்றுக்கு தீர்வு காண எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறது-என்றார். (அ)

# புதிய கட்சி ஆரம்பிக்கின்றார் மேர்வின்



கொழும்பு, டிசெ. 30

புதிய அரசியல் கட்சியொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

முழு நாடும் புது யுகத்தில் காலடி எடுத்துவைக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் சூழ்நிலையை விமர்சித்துள்ள அவர் மேர்வின் சில்வா தலைமை வகிக்க தயார் நாளை புதிய கட்சியை ஆரம்பிப்போம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## மீனவர்களின்...

என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இந்திய மீனவர்களின் அத்துமீறிய இழுவைமடிப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இதன்போது அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கோவிட் 19...

இவ்வாறு உயிரிழந்தார்.

சுவாசப் பிரச்னை காரணமாக மதவாச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இவர் பின்னர் அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். மருத்துவ பரி சோதனையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாக மருத்துவமனையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

## தேர்தல்...

தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத் தில் வாக்குகள் எண்ணப்பட்டபோது பல்வேறு குளறுபடிகள் நடந்தன என்று குற்றம் சுமத்தப்பட்டது.

இவ்வாறான ஒரு பின்னணியில் தேர்தலை பொதுமக்கள் நிராகரித்தால் என்ன நடக்கும், வாக்காளர்கள் வீட்டில் இருக்கும்போது அவர்களது வாக்குகள் அளிக்கப்படலாம். தேர்தல் காலத்தில் தேர்தல் புறக்கணிப்பானது தமிழர் பிரச்னைகள் குறித்த பேச்சுகளை உறுதி செய்ய செய்யாது.

செய்தித்தாள்களில் வாக்காளர் எண்ணிக்கை குறைவு என மட்டுமே கூறப்படும். மத்திய அரசாங்கத்துக்கு நெருக்கமான தரப்புகள் மக்கள் அதிக எண்ணிக்கையில் வாக்களித்ததாகவும் தமிழ் மக்கள் தேர்தலை புறக்கணித்த போதிலும் அதிக அளவான மக்கள் வாக்களித்தனர் என்று செய்திகளை வெளியிட கூடும்.

மறுபுறத்தில் கஜேந்திரகுமார் போன்ற மூன்று மொழிகளையும் சரளமாக பேசக்கூடிய பொது வேட்பாளர் ஒருவரால் தமிழ் மக்களுக்கு நல்ல சேவையை வழங்க முடியும். மூன்று மொழிகளும் தெரிந்த ஒரு பொது வேட்பாளரால் ஏனைய இன சமூகங்களுக்கும் தகவல்களை எடுத்துச் சொல்ல முடிகின்றது. மேலும் ஜனாதிபதி தேர்தல் பிரசார காலத்தில் தொலைக்காட்சி, பத்திரிகை உள்ளிட்ட அனைத்து ஊடகங்களிலும் தனது நிலைப்பாட்டை ஏனைய மொழிகளிலும் வெளிப்படுத்த முடியும். குறிப்பாக தமிழர்களின் கருத்துக்களை வெளிப்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் உருவாகும் ஆங்கில பத்திரிகைகளும் எமது பிரச்னைகளை முழுமையாக வெளிப்படுத்துவதில்லை.

இராஜதந்திர சமூகங்களுக்கும் வடக்கு, கிழக்கின் கள நிலைமைகளை எடுத்துரைக்க முடியும்.

இறுதியாக தமிழ் வேட்பாளர் ஒருவரினால் தனிச் சிங்கள வேட்பாளர் ஒருவர் 50வீத வாக்குகளை பெற்றுக் கொள்வதைத் தடுக்க முடியும். சிலவேளைகளில் தடுக்க முடியும். விருப்பத்தெரிவு முறையின் போது பல சிங்களவர்கள் தமிழ் வேட்பாளருக்கு விருப்பத்தெரிவு ஒன்றை வழங்கக்கூடும்.

எனவே பொதுவான தமிழ் வேட்பாளர் ஒருவரை களமிறக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. கஜேந்திரகுமார் தேர்தலில் போட்டியிட்டால் எனது வாக்கு அவருக்கே. எனினும் அவர் தொலைக்காட்சியில் சிங்கள மொழியில் உரையாற்ற வேண்டும். எங்கள் தமிழர் பிரச்னைகளை அவர் எடுத்துரைக்க வேண்டும் என விரும்புகின்றேன்" - என்றார்.

(ஐ)

## யாழ்...

சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மஹவ முதல் அநுராதபுரம் வரையிலான புகையிரத பாதை அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாலேயே யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படும் குறித்த காலப்பகுதியில் அநுராதபுரம் முதல் யாழ்ப்பாணம் வரை இரண்டு விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படும். அத்துடன், கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி செல்லும் யாழ்நிலா ரயில் அநுராதபுரத்தில் நிறுத்தப்பட்டு அங்கிருந்து திருகோண மலை நோக்கி சென்று, திருகோணமலையில் இருந்து கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை நோக்கி புறப்படும் - என்றார். (ஐ)

## 28நாட்களில்...

பொறுத்தவரையில் கடந்த ஜனவரி முதல் நவம்பர் வரை 111 டெங்கு நோயாளர்கள் பதிவாகினர். இதேவேளை, இந்த மாதத்தில் மட்டும் இதுவரையில் (28 நாட்களில்) 88 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அடையாளம் காணப்பட்ட நோயாளர்களில் பலர் கொழும்பு கண்டி மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளுக்கு சென்று வந்தவர்களாவர். குறிப்பாக, விடத்தல் தீவு மற்றும் மன்னார் நகரத் தின் சில பகுதிகளிலும் பேசாலை பகுதிக ளிலும் அதிகளவான டெங்கு தொற்றா ளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மன்னாரில் கழிவுகளை அகற்றல் செயன்முறை ஸ்தம்பிதம் அடைந்துள்ளமையாலும் மழையுடனான காலநிலை காரணமாக டெங்கு அபாயம் அதிகரித்துள்ளது. எனவே, பொதுமக்கள் அவதானமாக செயல்படுவதுடன், டெங்கு நோய் அறிகுறிகள் காணப்படும் பட்சத்தில் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுமாறும் அவர் தெரிவித்தார்.

## இலங்கையின்...

சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய தூதுவராக புதிதாகப் பதவி யேற்ற சந்தோஷ் ஜா நேற்று வெள்ளிக் கிழமை பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை அலரி மாளிகையில் சந்தித்தார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பில், இரு நாடுகளுக்கும் இடையேயான பொருளாதார உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு குறித்து விரிவான விவாதம் நடைபெற்றதுடன், முன் மொழியப்பட்ட கூட்டு திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மற்றும் சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சாரம் உள்ளிட்ட எரிசக்தி துறையில் முதலீடுகளை அதிகரிப்பதற்கான இந்தியாவின் திறன், எண்ணெய் சேமிப்பு தொட்டிகள், துறைமுகங்கள், திருகோணமலையில் ரயில்வே தொடர்பான கூட்டு திட்டங்கள் மற்றும் விவசாயம் மற்றும் மீன்பிடி துறைகளின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் திறன் குறித்து கலந்துரையாடப்பட்டது.

மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள கடன் மறுசீரமைப்பு வசதிகள் மற்றும் நிவாரண பொருட்கள், உணவு மற்றும் மருந்துகளை வழங்குவதன் மூலம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார். பணப்புழக்க பிரச்னைகளை தீர்க்க சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து உதவியை பெறுவதற்கு இந்தியா அளித்த ஆதரவிற்கும் பிரதமர் நன்றி தெரிவித்தார்.

புதிய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, 2007 முதல் 2010 வரை இலங்கையில் பணியாற்றிய காலத்தை நினைவு கூர்ந்தார், இருதரப்பு நட்புறவையும் ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்துவதற்காக மீண்டும் ஒருமுறை கொழும்புக்கு வருவது பெரும் பாக்கியமாகக் கருதுவதாகவும் தெரிவித்திருந்தார். (ஐ)

# பூரண அரசு மரியாதையுடன் விஜயகாந்த் உடல் அடக்கம்!



சென்னை, டிசெ. 30

தே. மு. தி. க. நிறுவனத் தலைவரும், நடிகருமான விஜயகாந்தின் உடல் 72 குண்டுகள் முழங்க முழு அரசு மரியாதையுடன் கோயம்பேட்டில் உள்ள கட்சி பணிமனையில் நல்லடக்கம் செய்யப்பட் டது. இறுதிச் சடங்கில் விஜயகாந்தின் குடும்பத்தினர், நெருங்கிய நட்பு வட்டம், முதல்வர் ஸ்டாலின், இந்நாள் - முன்னாள் அமைச்சர்கள், சில திரைப் பிரபலங்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக, தீவுத்திடலில் இருந்து கோயம்பேடு வரையிலான இறுதி ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு கண்ணீருடன் தங்கள் பிரியாவிடை கொடுத்தனர்.

தே. மு. தி. க. பணிமனையில் நல்லடக்கம் செய்யப்பட்ட விஜயகாந்தின் உடல் சந்தனப் பேழையில் வைக்கப்பட்டது. இதற்காக 50 கிலோ எடை கொண்ட பிரத்யேக சந்தனப் பேழை தயார் செய்யப்பட்டிருந்தது. அந்த சந்தனப் பேழையின் ஒருபுறத்தில் ‘புரட்சிக் கலைஞர் கேப்டன் விஜயகாந்த்’ என்கிற வாசகமும், நிறுவன தலைவர் தேசிய முற்போக்கு திராவிட கழகம் என்கிற வாசகமும், அதேபோல் அவரின் பிறப்பு, இறப்பு திகதிகளும் இடம் பெற்றிருந்தன. இதேபோல் சந்தன பேழையின் மற்றொரு பக்கத்தில் ‘கேப்டன்’ என்றும் பொறிக்கப்பட்டிருந்தது. அந்த சந்தன பேழையில் வைக்கப்பட்ட உடல் அடக்கம் செய்யப்படுவதற்காக குழிக்குள் இறக்கப்பட்டபோது உறவுகளும், நண்பர்களும், தொண்டர்களும் கதறி அழும் காட்சி காண்போரை கண்கலங்க செய்தது.

முன்னதாக, விஜயகாந்தின் உடல் தீவுத்திடல் மைதானத்தில் அஞ்சலிக்காக நேற்று வைக்கப்பட்டது. மக்கள் அஞ்சலி செலுத்தி சென்று திரும்ப ஏதுவாக பாதைகள் அமைக்கப்பட்டன. இதனால் மக்கள் திரளாக வந்து அஞ்சலி செலுத்தினர். பாதுகாப்புப் பணியில் ஆயிரக் கணக்கான பொலிஸார் ஈடுபட்டனர்.

பின்னர், தீவுத்திடலில் தொடங்கிய இறுதி ஊர்வலத்தில் பல்லாயிரக் கணக்கான தொண்டர்களும், பொதுமக்களும், ரசிகர்களும் கலந்துகொண்டு கண்ணீருடன் பிரியாவிடை அளித்தனர்.

வாகனத்தில் இருந்து விஜயகாந்தின் உடலை பொலிஸார் சுமந்து வந்தனர். பின்னர் சரியாக மாலை 6 மணிக்கு பொலிஸார் விஜயகாந்தின் உடலுக்கு வணக்கம் செலுத்தி மரியாதை செய்தனர். பின்னர், 72 குண்டுகள் வான் நோக்கி சுடப்பட்டு, வாத்தியங்கள் முழங்க விஜயகாந்தின் உடலுக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து விஜயகாந்தின் மகன்கள் விஜய பிரபாகரன், சண்முகபாண்டியன் மற்றும் உறவினர்கள் விஜயகாந்தின் உடலைச் சுற்றிவந்து இறுதிச் சடங்களை செய்தனர். குடும்ப வழக்கப்படியான சில சடங்குகளும் செய்யப்பட்டன. 7 மணியளவில் விஜயகாந்தின் உடல் குழியில் இறக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. (ஐ)

## நாட்டில்...

அரசாங்கம் எதேச்சதிகாரமாக வரிச்சுமையை அதிக ரிப்பதாலேயே நாடு இந்நிலைக்கு வந்துள்ளது. திருடர்களின் ஆணை பெற்று ஜனாதிபதி எடுக்கும் இவ் வாறான தீர்மானங்களை அங்கீகரிக்க முடியாது.

பொருளாதார நெருக்கடி காரணமாக 3 வயது முதல் பல்கலைக்கழக வயது வரை கல்வி கற்கும் 55 வீதத்தினர் பாதிக்கப்பட்டுள் ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்தின் சில தலைவர்கள் திருடர்களை பிடிக்காமல் அவர்களைக் காப்பாற்றினார்கள். 2015 ஆம் ஆண்டில் நாட்டில் இருந்து திருடப்பட்ட வளங்களைத் தேடி நடவடிக்கை எடுக்கும் திட்டத்தை நல்லாட்சி அரசாங்கம் செயல்படுத்தியது.

எனினும், திருடர்களை பிடிப்போம் என்று கூறிய தலைவர்கள் திருடர்களைக் காப்பாற்ற ஒப்பந்தம் செய்துகொண்டதால் அந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டது. நாட்டிலிருந்து திருடப்பட்ட அனைத்து சொத்துக்களையும் மீட்டெடுத்து, அந்த வளங்களை நாட்டின் தேசிய வருமானத்துக்குப் பயன்படுத்தி, மனித வளத்துக்காக முதலீடு செய்ய வேண்டும். அதற்காக ஸ்மார்ட் நாடு, ஸ்மார்ட் கல்வி, ஸ்மார்ட் மாணவர் தலைமுறையை உருவாக்கும் வேலைத்திட்டம் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் நடைமுறையாகும் - என்றார்

நேற்று வெள்ளிக்கிழமை ஹபரணை மகா வித்தியாலயத்துக்கு ஸ்மார்ட் வகுப்பறைக்கான உபகரணங்களை வழங்கிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## யுக்திய...

மையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு ஏற்கனவே சந்தேக நபர்களாக பட்டியலிடப்பட்டு தேடப்பட்டு வந்த 4,665 சந்தேக நபர்களில் 1,375 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## வடக்கு...

2024ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் ஒருபோதும் தமிழ் பொது வேட்பாளரை விரும்பமாட்டார்கள். அந்த மக்களின் வாக்குகள் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கே கிடைக்கும். கடந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் வடக்கு - கிழக்கு மக்களின் அதி கூடிய வாக்குகள் சஜித் பிரேமதாஸவுக்குக் கிடைத்தன.

எனினும், தெற்கில் சிங்கள மக்கள் மத்தியில் இருந்த இரட்டை நிலைப்பாடுகளால் அவரால் அந்தத் தேர்தலில் வெல்ல முடியாமல் போய் விட்டது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அந்தக் குழப்பம் இருக்க மாட்டாது. சிங்கள மக்கள் தெளிவடைந்து விட்டார்கள். அவர்கள் உண்மை நிலையைப் புரிந்துவிட்டார்கள். அடுத்த தடவை சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து சஜித்பிரேமதாஸவையே ஆதரிப்பார்ப்பார்கள். அவருக்கு அமோக வெற்றி கிடைக்கும்.

மொட்டுக் கட்சி வேட்பாளரோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரோ அல்லது ஜே.வி.பி. வேட்பாளரோ ஜனாதிபதியாக வருவதை நாட்டு மக்கள் விரும்பமாட்டார்கள். சஜித் என்ற ஒரே தலைவரால் - ஐக்கிய மக்கள் சக்தியால் மாத்திரமே இந்த நாட்டுக்கு விடிவு கிடைக்கும்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# பொருளாதார நெருக்கடி 2024இல் மேலும் அதிகரிக்கும்!

## ஐக்கிய தேசிய கட்சி எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 30

**2024ஆம் ஆண்டு நாட்டில் பெருமளவில் பொருளாதார தாக்கங்கள் ஏற்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும், ஜனவரி முதலாம் திகதி முதல் பெறுமதிசேர் வரி அதிகரிக்கப்படவுள்ளது. எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அனைத்துப் பொருட்களுக்கும் வரி விதிக்கப்படும். அதனூடாக ஏனைய பொருட்களின் விலைகளிலும் அதிகரிப்பு ஏற்படும். இதனால் மக்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்குவார்கள். பொருட்கள், சேவைகளின் விலை அதிகரிப்பை தாங்கிக்கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகும்.

2023 ஆம் ஆண்டு மக்கள் முகங்கொடுத்த பொருளாதார நெருக்கடி எதிர்வரும் ஆண்டில் மேலும் அதிகரிக்கும். இதனைக் கட்டுப் படுத்துவதற்கு அரசாங்கத்திடம் முறையான திட்டமிடல்கள் கிடையாது.

அரச முகாமைத்துவத்தில் பெரிய பிரச்னைகள் உள்ளன. அவசியமற்ற செலவுகள் கட்டுப்படுத்தப்படுவதில்லை. ஊழல், மோசடிகளால் பெருந்தொகை பணம் வீணடிக்கப்படுகிறது. எனினும், அரசாங்கம் அவற்றைக் கண்டு கொள்வதில்லை.

அரச வருமானத்தை உயர்த்த வேண்டிய தேவை உள்ளது. அதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அதற்காக வரியை அதிகரிப்பது மாத்திரம் வழியல்ல - என்றும் தெரிவித்தார்.

# ராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பயணித்த வாகனம்மீது தாக்குதல்!

## கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் கைது



கொழும்பு, டிசெ. 30

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பயணம் செய்த ஜீப் வண்டி மற்றுமொரு காரில் மோதியதில் ஏற்பட்ட விபத்தை அடுத்து, அதில் பயணித்தவர்கள்,அமைச்சரின் வாகனத்தை தாக்கிச் சேதப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் உள்ளிட்டோர் தங்கொட்டுவை பிரதேசத்தில் நடந்த வைபவம் ஒன்றில் கலந்துகொள்ள சென்றுகொண்டிருந்தபோது மாரவில மோதரவெல்ல தேவாலயத்திற்கு எதிரில் உள்ள வளைவில் நேற்று இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக கோடீஸ்வரான வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் சனத் நிஷாந்தவின் ஜீப் வண்டி மோதியதில் மற்றைய காருக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

அப்போது அதில் பயணித்த வர்த்தகர் வாகனத்துக்கு ஏற்பட்டுள்ள சேதம் மற்றும் மோதிய வாகனத்தில் அமைச்சர் இருப்பதை கண்டு கடும் கோபத்திற்கு உள்ளாகி, இரும்பு ஒன்றை எடுத்து வந்து அமைச்சரின் வாகனத்தை தாக்கியுள்ளதாக மாரவில பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# மட்டக்களப்பில் வீடொன்றை சுற்றிவளைத்த இளைஞர்கள்!

மட்டக்களப்பு, டிசெ. 30

மட்டக்களப்பு மாவட்டத் தின் மட்டக்களப்பு தலைமை யகத்திற்குட்பட்ட திஸ்ஸவீரசிங்கம் சதுக்கத்தில் நேற்று முன்தினம் மாலை வீடு ஒன்று இளைஞர்களினால் முற்றுகையிடப்பட்ட நிலையில் அங்கிருந்து ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன் இரண்டு மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளன.

திஸ்ஸவீரசிங்கம் சதுக்கம் 01ஆம் குறுக்கு வீதியில் வீடு ஒன்றை இளைஞர் ஒருவர் வாடகைக்குப் பெற்று வசித்து வந்த நிலையில் அவரின் செயற்பாடுகளை அப்பகுதி இளைஞர்கள் கண்காணித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன் தினம் மாலை குறித்த வீட்டை இளைஞர்கள் முற்றுகையிட்டதுடன் இது தொடர்பில் மட்டக் களப்பு தலைமையக பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து அங்கு வந்த மட்டக்களப்பு தலைமை யக பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டார மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் எம்.விவேகானந்தன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் அங்கு தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த அதிக பெறுமதி கொண்ட இரண்டு மோட்டார் சைக்கிள்களை மீட்டதுடன் ஐஸ் போதைப்பொருளும் மீட்கப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது அங்கு போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அங்கி ருந்த இரண்டு பெண்களும் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். (அ)

# இறக்குமதி இறைச்சியில் பன்றி காய்ச்சல் வைரஸ்

கொழும்பு, டிசெ. 30

சீனாவிலிருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டும் இறைச்சி பொருட்களில் ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் வைரஸ் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அரச கால்நடை மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வகையான இறைச்சி இறக்குமதியை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால் கால்நடை வளர்ப்பு தொழில் எதிர்காலத்தில் பெரும் நெருக்கடியை சந்திக்க நேரிடும் என அதன் தலைவர் சிசிர பியசிறி தெரிவித்துள்ளார். (ஐ)

# சு.கவின் மாவட்ட அமைப்பாளர் பதவியிலிருந்து தயாசிறி நீக்கம்

## ஏற்கனவே பொதுச் செயலர் பதவியில் இருந்தும் நீக்கம்

கொழும்பு, டிசெ. 30

சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ள தயாசிறி ஜயசேகர, அந்த கட்சியின் குருநாகல் மாவட்ட தலைவர் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு பதிலாக வடமேல் மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் லக்ஷ்மன் வெண்டருவவை மாவட்ட தலைவராக நியமிக்குமாறு சுதந்திரக்கட்சியின் குருநாகல் மாவட்ட அமைப்பாளர் கள், கட்சியின் தலைவரான மைத்திரி பால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். பிங்கிரியவில் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற குருநாகல் மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டத்தில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஜனவரி 8 ஆம் திகதி நடைபெறும் சுதந்திரக்கட்சியின் நிறைவேற்றுச் சபை கூட்டத்தில் இது குறித்தும் மேலும் சில பிரச்னைகள் தொடர்பாகவும் முக்கியமான முடிவுகள் எடுக்கப்படஉள்ளதாக தெரியவருகிறது. (அ)

# கொரோனா தொற்று குறித்து தேவையற்ற அச்சம் வேண்டாம்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

கொரோனா உள்ளிட்ட தொற்று நோய்கள் தொடர்பில் மக்கள் தேவையற்ற அச்சம் கொள்ளவேண்டாம் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது பிரதான வைத்தியசாலைகளுக்கு நாளாந்தம் வருகைதரும் நோயாளர்களின் மாதிரிகள் புறப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜி.விஜேசூரிய தெரிவித்தார்.

அண்மைய நாட்களாக கொரோனா உள்ளிட்ட தொற்று நோய்கள் மற்றும் பல்வேறு சுவாச நோய்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், பாதுகாப்பு முகக்கவசம் அணிவதன் மூலமும், முன்னதாக அறிவிக்கப்பட்ட சுகாதார பழக்க வழக்கங்களை மீண்டும் கடைப்பிடிப்பதன் மூலமும் நோய் பரவுவதை கட்டுப்படுத்த முடியும் என வைத்தியர் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே, தற்போது பரவி வரும் வைரஸ் நோயானது கொரோனா அல்லது இன்புளுவன்சா என்பது குறித்து அரசாங்கம் தெளிவான அறிக்கையை வழங்க வேண்டும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# முச்சக்கர வண்டி கட்டணம் உயரும்

கொழும்பு, டிசெ. 30

பெறுமதி சேர் வரி (வற்) 18 சதவீதமாக அதிகரித்த பின்னர் எரிபொருட்களின் விலை அதிகரிக்குமானால் முச்சக்கர வண்டி கட்டணங்கள் அதிகரிக்கப்படும் என அகில இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகளின் தொழிற் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவிக்கையில்,

ஜனவரி மாதம் முதல் எரிபொருட்களின் விலை 50 ரூபாய்க்கும் அதிகமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு இடம்பெற்றால் எரிபொருட்களின் விலைக்கு ஏற்ப கிலோமீற்றருக்கான கட்டணம் அதிகரிக்கப்படும்.

எரிபொருட்களின் விலை அதிகரித்த சந்தர்ப்பங்களில் எமது சங்கம் கட்டணங்கள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், இம்முறை நாம் எரிபொருட்களின் விலைக்கு ஏற்ப கட்டணத்தை அதிகரிக்க தீர்மா னம் எடுத்துள்ளோம் - என்றார். (ஐ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# உலக மக்கள் தொகை 8 பில்லியனை எட்டுகிறது

## இந்த ஆண்டு 75 மில்லியன் அதிகரிப்பு

நியூயோர்க், டிசெ. 30

**உலக மக்கள் தொகை 2023ஆம் ஆண்டில் 75 மில்லியன் அதிகரித்துள்ளதுடன் புத்தாண்டு தினத்தில் அது 8 பில்லியனை தாண்டும் என அதிகமாக இருக்கும் என அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியகம் வெளியிட்ட புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

2023 ஆம் ஆண்டில் உலகளாவிய சனத் தொகை வளர்ச்சி விகிதம் 1மூ க்கும் குறைவாகவே இருந்தது. 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியகத்தின் புள்ளிவிவரங்களின் படி, ஒவ்வொரு நொடியும் உலகளவில் 4.3 பிறப்புகளும் இரண்டு இறப்புகளும் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2023 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் சனத்தொகை வளர்ச்சி விகிதம் 0.53மூ ஆக இருந்துள்ளது. இது உலகளாவிய வளர்ச்சி விகத்துடன் ஒப்பிடுகையில் அரைவாசியாகும். இவ்வாண்டு 1.7 மில்லியன் மக்கள் தொகை வளர்ச்சியுடன் சேர்த்தது புத்தாண்டு தினத்தில் 335.8 மில்லியன் மக்கள் தொகையை அமெரிக்கா கொண்டிருக்கும்.

தற்போதைய வேகத்தில் சனத் தொகை வளர்ச்சி தொடர்ந்தால் 2020 - 20230 இற்கு இடைப்பட்ட தசாப்தம் அமெரிக்க வரலாற்றில் மிகவும் மெதுவாக சனத்தொகை வளரச்சியடைந்த தசாப்தமாக இருக்கலாம்.

2020 முதல் 2030 வரையிலான 10 ஆண்டு காலப்பகுதியில் 4% க்கும் குறைவான வளர்ச்சி விகிதத்தையே அமெரிக்க கொண்டிருக்கும் என அமெரிக்க மக்கள்தொகை ஆய்வாளர் வில்லியம் ஃப்ரே கணித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், ஒவ்வொரு ஒன்பது வினாடிகளுக்கும் ஒரு பிறப்பு மற்றும் ஒவ்வொரு 9.5 வினாடிகளுக்கு ஒரு இறப்பும் அமெரிக்காவில் ஏற்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இருப்பினும், புதிய குடியேற்றங்கள் அமெரிக்காவில் மக்கள் தொகையை குறையாமல் தடுக்கும்.

சர்வதேச இடம்பெயர்வு ஒவ்வொரு 28.3 வினாடிகளுக்கும் ஒரு நபரை அமெரிக்க மக்கள் தொகையில் சேர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிறப்பு, இறப்பு மற்றும் நிகர சர்வதேச இடம்பெயர்வு ஆகியவற்றின் இந்த கலவையானது ஒவ்வொரு 24.2 வினாடிகளுக்கும் ஒரு நபர் அமெரிக்க மக்கள் தொகையில் அதிகரிப்புக்கு வழிவகுக்கும் எனவும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

(அ)



# லைபீரியாவில் பெற்றோல் கொள்கலன் வெடித்தது!

## 40 பேர் உயிரிழப்பு

டொயோட்டா, டிசெ. 30

ஆபிரிக்க நாடான லைபீரியாவில் உள்ள டொயோட்டாவில் பெட்ரோல் கொள்கலன் வெடித்து சிதறியதில் 40 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் மேலும் 83 பேர் காயமடைந்துள்ளனர். பலி எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக லைபீரியா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

டொயோட்டாவில் எண்ணெய் கொள்கலன் வண்டி கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்துக்குள்ளான கொள்கலனில் இருந்து பெட்ரோல் கசிவதை கண்டு மக்கள் பெட்ரோலை சேகரிக்க சென்றிருந்த போது கொள்கலன் திடீரென வெடி இந்த பயங்கர விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த பயங்கர தீ விபத்தில் 40 பேர் பலியாகினர். 83 பேர் படுகாயமடைந்தனர். எண்ணெய் கொள்கலன் கவிழ்ந்ததற்கான காரணம் தெளிவாகத் தெரியவில்லை.

இந்த சம்பவத்திற்கு லைபீரியா ஜனாதிபதி வீஹ் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளார். இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல். சோகத்தின் படங்கள் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துவதாக அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)



# உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்!

## 13 பேர் பலி

கீவ், டிசெ. 30

ரஷ்யா, உக்ரைன் மீது 122 ஏவுகணைகள் மற்றும் 36 ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளது. கிட்டதட்ட 13 பேர் இதில் பலியாகியுள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

போர் ஆரம்பித்த 22 மாதங்களில் இதுபோல் சரமாரியான தாக்குதல் எட்டு மாதங்களுக்கு பிறகு இப்போதுதான் நடந்துள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

வியாழக்கிழமை இரவு முதல் வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி, உக்ரைன் 87 ஏவுகணைகள் மற்றும் 27 சாஹெத் வகை ட்ரோன்களைத் தடுத்து அழித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

முதல்நிலை போர், பனிச் சூழல் காரணமாக தடைபட்டுள்ளது. உக்ரைன் தனது ஆதரவு நாடுகளிடம் ரஷியாவின் தாக்குதலை எதிர்கொள்ளும் வகையில் வான்வழி தற்காப்பு ஆயுதங்களை விரைந்து அளிக்குமாறு கேட்டு வருகிறது.

18 மணி நேரம் தொடர்ந்த இந்தத் தாக்குதலில் ஏராளமான கட்டடங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள் சேதமடைந்துள்ளன.

ரஷ்யா தன்னிடம் உள்ள அனைத்து வகையான ஆயுதங்களையும் இந்தப் போரில் பயன்படுத்துவதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

உக்ரைனின் தலைநகர் உள்பட ஆறு நகரங்கள், தெற்கு முதல் வடக்கு வரை, கிழக்கு முதல் மேற்கு வரை ரஷ்யா தாக்குதல் நடத்தியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# பாகிஸ்தானில் புத்தாண்டு கொண்டாட்டத்திற்கு தடை

## காஸா நிலைமையால் முஸ்லிம் சமூகம் மன வேதனையில்

இஸ்லாமாபாத், டிசெ. 30

பாகிஸ்தானில் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு கடும் தடை விதிக்கப்பட்டுள்ளது.இதற்கான அறிவிப்பை அந்நாட்டின் இடைக்கால பிரதமர் அன்வர்-உல்-ஹக் கக்கரே வெளியிட்டுள்ளார்.

காஸாவில் நிலவும் போர் சூழ்நிலையில் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவளிப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் மக்கள் அனைவரும் பலஸ்தீனத்தின் மோசமான சூழ்நிலையை மனதில் கொள்ள வேண்டும். இது காஸாவில் உள்ள நமது பலஸ்தீன சகோதர சகோதரிகளுக்கான ஒற்றுமையைக் காட்ட வேண்டிய சந்தர்ப்பம்.

புத்தாண்டுக்கான எந்தவொரு நிகழ்ச்சியையும் நடத்துவதற்கு அரசாங்கம் கடுமையான தடையை விதித்துள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் என பாகிஸ்தான் பிரதமர் கூறியுள்ளார்.

இஸ்ரேலின் இராணுவ தாக்குதல்கள் காரணமாக காஸாவில் இதுவரை 21 ஆயிரம் பலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர்.

இஸ்ரேல் தாக்குதலில் 9 ஆயிரம் குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் தெரிவித்துள்ளார்.

காஸா மற்றும் மேற்குக் கரையில் நிராயுதபாணியான பலஸ்தீனியர்கள் மற்றும் அப்பாவி குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் பாகிஸ்தான் உட்பட முழு முஸ்லிம் சமூகமும் மன வேதனையில் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் பாகிஸ்தானில் பொதுவாக புத்தாண்டு கொண்டாட்டங்கள் அதிக ஆரவாரத்துடன் நடப்பதில்லை.

இஸ்லாமிய குழுக்களின் எதிர்ப்புகளின் பின்னணியில் புத்தாண்டு கொண்டாடங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. (அ)





# இஸ்ரேல் இராணுபவத்தினர் சரியாகவே செயற்பட்டனர்!



டெல் அவிவ், டிசெ. 30

காஸாவில் இஸ்ரேலிய பணயக்கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்ட விடயத்தில் இராணுவ வீரர்கள் சரியாக செயற்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த துப்பாக்கிச்சூட்டில் எந்த அசம்பாவிதமும் ஏற்படவில்லை எனவும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களின் போது இராணுவ நடைமுறைகளை பின்பற்றுவது அவசியம் எனவும் இராணுவம் கூறியுள்ளது.

அச்சுறுத்தலான சூழ்நிலைகளில் எதிரி குறித்து நிச்சயமற்ற நிலைமை ஏற்படும் போது, சிந்தித்து முடிவெடுப்பது கடினமானது என இராணுவ தலைமை தளபதி ஜெனரல் ஹெர்சி ஹலேவி தெரிவித்துள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி இஸ்ரேலிய இராணுவம்,ஹமாஸால் சிறைப்பிடிக்கப்பட்ட மூன்று பேரை தீவிரவாதிகள் என தவறாக கருதி சுட்டுக் கொன்றது.

ஷாஜாயா என்ற இடத்தில் சோதனைகளின் போது மூன்று பணயக்கைதிகள் உதவி கோரி கோஷமிட்டுள்ளனர்.ஆனால் இது ஹமாஸின் சதியாக இருக்கலாம் என நினைத்த இஸ்ரேல் படையினர் அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதனால், பணயக்கைதிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இந்த சம்பவத்திற்கு இஸ்ரேல் இராணுவம் வருத்தம் தெரிவித்துள்ளது. இனிமேல் இது போன்ற தவறுகள் நடக்காது எனவும் உறுதியளித்துள்ளது.

இந்த பணயக்கைதிகளை காப்பாற்ற முடியாமல் போனமைக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூவும் வருத்தம் தெரிவித்துள்ளார். உயிரிழந்த பணயக்கைதிகளின் குடும்பங்களுக்கு ஆதரவு வழங்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.(அ)

# கட்டார்: மரண தண்டனை விதிக்கப்பட்ட 8 இந்தியர்களுக்கு தண்டனை குறைப்பு!

தீபக் மண்டல்



கட்டாரில் இந்திய முன்னாள் கடற்படை வீரர்கள் 8 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், அவர்களுடைய தண்டனை தற்போது குறைக்கப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தகவல் தெரிவித்துள்ளது. இந்தத் தீர்ப்பின் முழு விவரங்கள் கிடைப்பதற்காகக் காத்திருப்பதாகவும் செய்தி அறிவிப்பில் வெளியுறவுத்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

“கட்டாருக்கான இந்திய தூதர், ஏனைய அதிகாரிகள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் இன்று மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் இருந்தனர். இந்த விவகாரத்தில் ஆரம்பம் முதல் இந்திய அரசு அவர்களுக்கு ஆதரவாக இருந்து வருகிறது. மேலும் அனைத்து தூதரக, சட்ட உதவிகளைத் தொடர்ந்து வழங்குவோம்.

இந்த வழக்கு குறித்த விவரங்கள் ரகசியமானது மற்றும் உணர்திறன் மிக்கது என்பதால், இந்த நேரத்தில் மேற்கொண்டு எந்தக் கருத்தையும் கூற இயலாது,” என்றும் அந்தச் செய்தியறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

### மரண தண்டனை விதிக்கப்பட்ட 8 பேர் யார்?

முன்னதாக, கட்டாரில் முன்னாள் இந்திய கடற்படை அதிகாரிகள் 8 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது இந்திய அரசுக்குப் பெரும் சவாலாக மாறியது.

இவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை குறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியது.

இந்த முடிவால் அதிர்ச்சி அடைந்துள்ளதாகத் தெரிவித்த இந்திய அரசு, ஆனால் இந்த பிரச்னையைத் தீர்ப்பதற்கான அனைத்து சட்ட வழிகளையும் ஆராய்வதாகவும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.

கட்டார் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து, முன்னாள் இந்திய கடற்படை ஊழியர்களை மரண தண்டனையில் இருந்து காப்பாற்றுவது இந்தியாவுக்கு பெரிய ராஜ்ஜீய சவாலாகக் கருதப்படுகிறது.

மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தவர்களில் கமாண்டர் பூர்ணேந்து திவாரி, கேப்டன் நவ்தேஜ் சிங் கில், கேப்டன் சௌரப் வசிஷ்டா, கேப்டன் வீரேந்திர குமார் வர்மா, கமாண்டர் சுக்னகர் பகாலா, கமாண்டர் சஞ்சீவ் குப்தா, கமாண்டர் அமித் நாக்பால் மற்றும் மாலுமி ராகேஷ் ஆகியோர் அடங்குவர். இவர்கள் பாதுகாப்பு சேவை நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்தனர்.

இந்நிறுவனத்தில் பணிபுரியும் அனைவரும் இந்திய கடற்படையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள்.

இவர்கள் கடந்த ஆண்டு (2022) ஆகஸ்ட் 30ஆம் தேதி கட்டாரில் கைது செய்யப்பட்டனர். அன்றிலிருந்து அவர்கள் தனி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீதான வழக்கு விசாரணை இந்த ஆண்டு மார்ச் 29ஆம் தேதி தொடங்கியது.

அவர்கள் நீண்ட காலமாக சிறையில் அடைக்கப்பட்டதற்கும் அவர்களுக்கு மரண தண்டனை விதித்ததற்கும் எந்தக் காரணமும் வெளிப்படையாகத் தெரிவிக்கப்படவில்லை.



“இந்தியன் எக்ஸ்பிரஸ்” செய்தியின்படி, முன்னாள் இந்திய கடற்படை அதிகாரிகளின் குடும்பத்தினருக்கும் அவர்கள் மீது எந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்பது குறித்து எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை.

### மோதி அரசு மீது அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது

இந்த விவகாரத்தில் மோதி அரசு தலையிட வேண்டும் என்று இந்தியாவில் அழுத்தம் எழுந்துள்ளது.

காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் தனது சமூக ஊடக பக்கத்தில், “கத்தாரில் 8 முன்னாள் இந்திய கடற்படை அதிகாரிகள் தொடர்பான விவகாரத்தில் மிகவும் மோசமான முன்னேற்றங்கள் இருப்பதை இந்திய தேசிய காங்கிரஸ் மிகுந்த வருத்தத்துடனும், வேதனையுடனும், உணர்ந்துள்ளது.

மேல்முறையீடு செய்வதில் அதிகாரிகளுக்குப் போதுமான ஆதரவு கிடைப்பதை உறுதி செய்ய இந்திய அரசாங்கம் கத்தார் அரசுடனான தனது ராஜஜீய மற்றும் அரசியல் செல்வாக்கை முடிந்தவரை பயன்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம், எதிர்பார்க்கிறோம். மேலும், அவர்களை விரைவில் விடுவிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்,” என்று பதிவிட்டிருந்தார்.

இதேபோல், ஏஐஎம்ஐஎம் தலைவரும் எம்.பி.யுமான அசாதுதீன் ஓவைசி தனது ஓ சமூக ஊடக பக்கத்தில், “பிரதமர் நரேந்திர மோதி முன்னாள் பணியாளர்கள் அனைவரையும் திரும்ப அழைத்து வர வேண்டும். கத்தாரில் சிக்கித் தவிக்கும் முன்னாள் கடற்படை அதிகாரிகளின் பிரச்னையை ஆகஸ்ட் மாதம், நான் எழுப்பினேன். இன்று அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிய நாடுகள் தன்னை எவ்வளவு நேசிக்கின்றன என்பதைப் பற்றி பிரதமர் மோதி பெரிதாகப் பேசுகிறார். அவர் முன்னாள் அதிகாரிகளைத் திரும்ப அழைத்து வர வேண்டும். அவர்கள் மரண தண்டனையை எதிர்கொள்வது மிகவும் துரதிர்ஷ்டவசமானது,” என்று கூறியுள்ளார்.

மூத்த பத்திரிகையாளர் ஷீலா பட், “தனியார் நிறுவனங்களால் பணியமர்த்தப்பட்ட முன்னாள் கடற்படை அதிகாரிகளுக்கு இந்திய அரசாங்கம் உதவ முயன்றபோது, கட்டார் ஒத்திசைய விரும்பவில்லை. ஏனெனில் அவர்கள் இந்த வழக்கு மூலம் பேரம் பேச விரும்பினர். ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் சவூதி அரேபியாவுடனான இந்தியாவின் நிலையான இருதரப்பு உறவுகளை அது விரும்பவில்லை. ஆகவே, இந்தப் பிராந்தியத்தில் துருக்கி மற்றும் ஈரானுடன் இணைந்து கட்டார் ஒரு பெரிய அரசியல் ஆட்டத்தை விளையாடுகிறது,” என்று தனது சமூக ஊடகத்தில் பதிவு செய்துள்ளார்.



மரண தண்டனை விதிக்கப்பட்ட இந்தியர்கள் அல் டஹ்ரா குளோபல் டெக்னாலஜிஸ் அண்ட் கன்சல்டன்சி சர்வீசஸ் என்ற பாதுகாப்பு சேவைகளை வழங்கும் நிறுவனத்தில் பணிபுரிந்தவர்கள்.

இந்த நிறுவனம் ஓமன் குடிமகன் காமிஸ் அல்-அஜ்மிக்கு சொந்தமானது. அஜ்மி ராயல் ஓமன் விமானப்படையின் படைத் தலைவராக இருந்து ஓய்வு பெற்றவர். இந்த எட்டு இந்தியர்களுடன் அவரும் கைது செய்யப்பட்டார். இருப்பினும், அவர் நவம்பர் 2022இல் விடுவிக்கப்பட்டார்.

### நிறுவனத்தின் செயல்பாடுகள் என்ன?

நிறுவனத்தின் பழைய இணையதளம் இன்னும் புதுப்பிக்கப்படாமல் உள்ளது. கட்டார் அமிரி தேசியப் படைக்கு பயிற்சி, தளவாடங்கள் மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்கியுள்ளது என்று நிறுவனத்தின் இணையதளப் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய இணையதளத்தில் நிறுவனத்தின் பெயர் டஹ்ரா குளோபல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கட்டார் அமிரி தேசிய படைக்கு வழங்கப்பட்ட அதன் சேவைகள் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதன் தலைமைப் பொறுப்புகளில் இருந்த கைது செய்யப்பட்ட முன்னாள் கடற்படை அதிகாரிகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

ராணுவ நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்குவதற்கு கட்டார் அரசுக்கு இந்நிறுவனம் உதவுவதாக பல ஊடக அறிக்கைகளில் கூறப்பட்டுள்ளன. இருப்பினும், இதற்கான உறுதியான ஆதாரம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

மரண தண்டனை விதிக்கப்பட்ட இந்தியர்களில் ஒருவரான கமாண்டர் பூர்ணேந்து திவாரி இந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக இருந்தார்.



இந்தியாவுக்கும் கட்டாருக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவதில் அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக 2019இல் அவருக்கு பிரவாசி பாரதிய சம்மான் விருது வழங்கப்பட்டது.

அப்போது கட்டாருக்கான அப்போதைய இந்தியத் தூதரும், கட்டார் பாதுகாப்புப் படைகளின் சர்வதேச ராணுவக் கூட்டுறவின் முன்னாள் தலைவருமான பி. குமரன் மூலம் கௌரவிக்கப்பட்டார்.

இந்திய கலாசார மையத்தில் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது, இந்திய தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரி கேப்டன் கவுசிக் விழாவில் கலந்துகொண்டார்.

தண்டனை விதிக்கப்பட்ட இந்தியர்கள் கைது செய்யப்படுவதற்கு முன் நான்கு முதல் ஆறு ஆண்டுகள் டஹ்ராவில் பணிபுரிந்துள்ளனர்.

### எதற்காக, எப்படி இந்த கைதுகள் மேற்கொள்ளப்பட்டன?

மரண தண்டனை விதிக்கப்பட்ட இந்திய கடற்படையின் முன்னாள் அதிகாரிகளை கட்டாரின் உளவுத்துறை நிறுவனமான ஸ்டேட் செக்யூரிட்டி பீரோ கைது செய்துள்ளது.

அவர்கள் கைது செய்யப்பட்டது குறித்து கடந்த ஆண்டு (2022) செப்டம்பர் நடுப்பகுதியில் இந்திய தூதரகத்துக்கு தெரிய வந்தது.

செப்டம்பர் 30 அன்று, இவர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் தொலைபேசியில் சிறிது நேரம் பேச அனுமதிக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட ஒரு மாதத்திற்குப் பிறகு முதன் முறையாக அவர்களுக்கு தூதரக அனுமதி வழங்கப்பட்டது. அப்போது, இந்திய தூதரக அதிகாரி ஒருவர் இவர்களைச் சந்தித்தார்.

இந்த சந்திப்பிற்குப் பிறகு, அடுத்த சில மாதங்களுக்கு கைது செய்யப்பட்ட இந்தியர்கள் ஒவ்வொரு வாரமும் தங்கள் குடும்பத்தினருடன் பேச அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் வெளிப்படையாக அறிவிக்கப்படவில்லை. இதை இந்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பக்சியும் உறுதி செய்துள்ளார்.


விசாரணையின் போதே குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டதாக அவர் கூறினார். முன்னாள் கடற்படை அதிகாரிகள் மீதான குற்றச்சாட்டுகளை இந்திய அரசோ அல்லது கட்டார் அரசோ பொதுவெளியில் தெரியப்படுத்தவில்லை.



### குடும்பத்தினர் என்ன கூறுகின்றனர்?

எட்டு பேரும் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்ட பிறகு, ஒரு இந்திய இணைய ஊடகம் கமாண்டர் பூர்ணேந்து திவாரியின் சகோதரி மருத்துவர் மிது பார்கவா மற்றும் கேப்டன் நவ்தேஜ் சிங் கில்லின் சகோதரர் நவ்தீப் கில் ஆகியோரிடம் பேசியது.

(16ம் பக்கம் பார்க்க)



# டான் தொலைக்காட்சியின் ‘சாதனைத் தமிழன் 2023’ விருது பெறுகிறார் இசையமைப்பாளர் கண்ணன்!

## நாளை நடக்கும் மாபெரும் இசை நிகழ்ச்சியில் விருது கையளிப்பு!!



‘இந்தமண் எங்களின் சொந்தமண்ணென’ இசையால் உலகிற்குணர்த்தியகலைமகன். நாமும் நமக்கென்றோர் நலியாக் கலையுடையோம் எனஉரத்திசைத்ததலைமகன் - மூத்த இசையமைப்பாளர் - இசைவாணர் கண்ணன் எனஅழைக்கப்படும் முத்துக்குமாருகோபாலகிருஷ்ணன்டான் தொலைக்காட்சிக் குழுமத்தால் 2023 ஆண்டுக்கான‘சாதனைத் தமிழன்’ விருதுவழங்கிக் கௌரவிக்கப்படுகின்றார்.

கருவிகளை இசைப்பவர்களோ இசைக்கோர்வைகளை உருவாக்குபவர்களோகுரலெடுத்துப் பாடுபவர்களோ நிலைத்த இசையாளர்களாகவெற்றிபெறுவதில்லை. இவையாவும் ஒருங்கமைந்துமக்கள் மனங்களில் நிலை பெறுவோரேவரலாற்றில் நிலைத்திருக்கின்றனர்.

கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாகஈழத்து இசைவானில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் நட்சத்திரமாக இசைவாணர் கண்ணன் திகழ்கின்றார். யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் 29.04.1943 இல் முத்துக்குமாரு இராசம் மாதம்பதியரின் மகனாகப் பிறந்தகண்ணன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் எஸ்.எஸ்.சி. வகுப்புவரைகற்றார்.

இசைமீதானஈடுபாட்டினால் இசைப்புலவர் சண்முகரத்தினம், சங்கீதபூஷணம் இராஜலிங்கம், சிதம்பரம் கிருஷ்ணமூர்த்தி, அரியாலை வித்துவான் ச.பாலசிங்கம் ஆகியோரிடம் கர்நாடக சங்கீதத்தையும் ஹிந்துஸ்தானி சங்கீதத்தை வித்துவான் கனகசபை போன்ற இசைமேதைகளிடம் இசைநுட்பங்களைக் கற்றார். 1960 களில் கண்ணன் இசைக்குழுஎன்றபெயரில் ஓர் இசைக்குழுவை உருவாக்கிஈழத்தின் பலபாகங்களிலும் நிகழ்ச்சிகளை நடத்தத் தொடங்கினார். ஹார்மோனியம், கிற்றார், கீபோர்ட், எக்கோடியன், ஷாகிபாஜா, பியானோ, வீணை, தபேலா, மிருதங்கம் போன்றகருவிகளை இசைப்பதில் வல்லமைபெற்றார்.

1967இல் இடம்பெற்றதினகரன் விழா இவரது இசைப் பயணத்தின் திருப்புமுனையாகஅமைந்தது. தேசியநிலை








யில்கண்ணன்புகழ்பெறதினகரன் பத்திரிகைவழங்கிய கௌரவம் வழிசமைத்தது. தொடர்ந்து இலங்கைவானொலிதமிழ்ச்சேவையில் முதற்தர இசையமைப்பாளர் நியமனமும் இவருக்குக் கைகூடிற்று.

மெல்லிசைநிகழ்வுகளையும் பொப்பிசைநிகழ்வுகளையும் இலங்கைவானொலிக் கலையத்தின் ஊடாகவும் இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத்தின் ஊடாகவும் கண்ணன் நேசம் இரட்டையர் என்றபயணத்தின் மூலம் “இசைப்பரிதி” கண்ணன் வழங்கினார்.

வண்ணைக் கலைவாணர் நாடகமன்றத்தின் நாடகங்களுக்கு இசைவழங்கியதுடன் 1978 இல் யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பெற்றநாடகஅரங்கக் கல்லூரியின்



வரலாற்றுச் சிறப்புமிக்க மண்சுமந்தமேனியர் போன்றநாடகங்களுக்கும் இசைவழங்கினார்.கோமாளிகள், ஏமாளிகள், தெய்வம் தந்தவீடுமுதலியஈழத்துத் திரைப்படங்கள் மற்றும் குறும்படங்களுக்கும் இசைவழங்கினார்.

நம்மண்ணிற்குரிய இசைவடிவங்களாகமெல்லிசை, பொப்பிசைஎன்பனஆரம்பகாலத்தில் திகழ்ந்தன. விடுதலைப் போராட்டம் கூர்மையுற்றபின்னர் புரட்சிப் பாடல்கள் மக்கள் மத்தியில் புகழ் பெற்றன. இவற்றிற்கு தனது தனித்துவமான இசையால் உருவமும் உள்ளடக்கமும் கொடுத்தபெருமைக்குரியவர் கண்ணன் அவர்களேயாவார். இவரது இசையில் வெளிவந்தபத்திப் பாடல்களும் தனித்துவம் மிக்கனவாகத் திகழ்கின்றன.

கண்ணனின் இசையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்கள் வெளிவந்துள்ளன. தென்னிந்திய இசைக்குச் சற்றும் தளர்வுறாததனிஅடையாளமாகஈழத்து இசை திகழ்வதற்குக் கண்ணன் வழங்கியபங்களிப்புக் கனதியானது.

“ஆழமான இசையறிவும் தேடலும் இசைக்கருவிகளைச் சரியானமுறையில் இயக்கும் திறனும் புதியதுபுனையும் இயல்பானஆற்றலும் கொண்டஒருவரால் நிச்சயமாக இசைத்துறையில் பிரகாசிக்கமுடியும். ஆனால் விஞ்ஞானத் தொழினுட்பத்தைமட்டும் நம்பியிருக்கும் ஒருவரால் இசைத்துறையில் நிலைத்திருக்கமுடியாது” என்ற கூற்றும் இங்குமனங்கொள்ளத்தக்கதாகும். இசையமைப்பாளர் கண்ணனின் வெற்றியையும் நிலைத்திருப்பையும் இந்தக் கூற்றுடன் பொருத்திப் பார்க்கமுடியும்.

கண்ணனின் இசைவாரிசுகளாகப் பலர் இந்தமண்ணில் உதயமாகியுள்ளனர். அவர்களுள் இசையமைப்பாளர்களானமுரளி,சாயிதர்சன் என்போர் கண்ணனின் புதல்வர்களாவர். வளரும் பாடகியும் தென்னிந்திய தொலைக்காட்சியில் புகழ் பெற்றவருமாகிய பவதாயினி கண்ணனின் மகள்வழிப் பேர்த்திஆவார்.

சாயிபக்தரான இசையமைப்பாளர் கண்ணன் ஈழத்து இசையுலகின் தனித்தவோர் அடையாளம். இடர்சூழ்ந்த உலகினை இசைசூழ்ந்துமகிழச் செய்தபெரியோன்.

சிவபூமிஅறக்கட்டளைநிறுவுனர் செஞ்சொற்செலவர் கலாநிதி ஆறு. திருமுருகன்,திருமறைக்கலாமன்ற இயக்குநர் (மறைந்த) அருட்கலாநிதிநீ.மரியசேவியர், நாடகத்துறைப் பேராசிரியர் சி. மௌனகுருமுல்லைமண்ணின் தொழில் முயற்சியாளர் சாஜிராணி, யாழ். பல்கலைக்கழகவேந்தர் பேராசிரியர் பத்மநாதன் என்றவரிசையில் 2023 ஆம் ஆண்டுக்கானசாதனைத் தமிழன் விருதை “இசைவாணர்” மு. கண்ணனுக்கு வழங்குவதில் டான் குழுமம் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்கின்றது.

செந்தமிழ்ச் சொல்லருவி
**சந்திரமௌலீசன் லலீசன்**
(தலைவர்,டான் சாதனைத்தமிழன் விருதுத் தெரிவுக் குழு)

# கட்டார்: மரண தண்டனை விதிக்கப்பட்ட...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது, கட்டாரில் கைது செய்யப்பட்டுள்ளவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மோடி அரசுக்கு மிது கார்கவா வேண்டுகோள் விடுத்திருந்தார். தனது சகோதரர் வயது முதிர்ந்தவர் என்றும் பல்வேறு நோய்களால் அவதிப்பட்டு வருவதாகவும் அவர் கூறியிருந்தார்.

அவர் 63 வயதில் தனி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் என்ன கஷ்டங்களை அனுபவிக்கிறார் என்பதை தன்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை என்று மிது தெரிவித்திருந்தார்.

பூர்ணேந்து திவாரி சிறையில் இருந்து தங்களின் 83 வயதான தாயுடன் பேசியதாகவும், மகனின் பாதுகாப்பு குறித்து தாயார் கவலைப்படுவதாகவும் அவர் கூறியிருந்தார்.

கேப்டன் நவ்தேஜ் சிங் கில்லின் பிறந்த நாளான செப்டம்பர் 6ஆம் தேதி அவருக்கு வாட்ஸ் ஆப்பில் வாழ்த்து செய்தி அனுப்பியதாகவும் அதற்கு அவர் பதிலளிக்காததால் சந்தேகம் அடைந்ததாகவும் அவரது சகோதரர் நவ்தீப் கில் கூறினார்.

பின்னர் அவருடனான தொலைபேசி தொடர்பு நின்றுபோனது. நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, கட்டாரின் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருப்பது தெரிய வந்தது. நவ்தீப் கில், தனது சகோதரருக்கு உடல்நலப் பிரச்னைகள் இருப்பதாகக் கூறினார்.

தனது சகோதரர் ஓய்வு பெறும் வரை இந்திய கடற்படையில் பணியாற்றியதாகவும் தனது அண்ணனை இந்தியாவுக்கு கொண்டு வருவது அரசின் பொறுப்பு என்றும் நவ்தீப் கூறினார்.

கடந்த ஆண்டு டிசம்பரில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், கைது செய்யப்பட்ட இந்தியர்களை அழைத்து வருவதற்கு அரசு முன்னுரிமை அளிப்பதாகக் கூறியிருந்தார்.

### இந்தியாவுக்கு இது எத்தகைய சவாலாக இருக்கிறது?

இந்த விவகாரம் இந்தியாவுக்கு எவ்வளவு பெரிய அரசியல் சவாலாக இருக்கிறது? இந்தப் பிரச்னையைத் தீர்க்கவும் தனது முன்னாள் கடற்படை அதிகாரிகளை விடுவிக்கவும் இந்தியாவால் என்ன செய்ய முடியும்?

இதைப் புரிந்துகொள்ள, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் மேற்கு ஆசிய ஆய்வு மையத்தின் இணைப் பேராசிரியர் முடாசர் கமரிடம் பேசியபோது:

ராஜஜீய மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்படாவிட்டால், இந்த விவகாரம் எந்தத் திசையில் செல்லும் என்று கூறுவது கடினம் என்று அவர் கூறினார். மேலும், நிச்சயமாக இது இந்திய பொதுமக்களின் கருத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் குறிப்பிடுகிறார். ஆம், ஆனால் இது கண்டிப்பாக இந்தியாவில் பொது மக்களின் கருத்தை பாதிக்கும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, முன்னாள் கடற்படை அதிகாரிகள் மீதான குற்றச்சாட்டுகளை இந்தியாவோ அல்லது கட்டாரோ வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை. இதற்கு என்ன காரணம்?

“இதுவோர் உணர்வுப்பூர்வமான விஷயம். இத்தகைய உணர்வுப்பூர்வமான விஷயம் தொடர்பாக பிரச்னை எழும்போது, நட்புறவு கொண்ட நாடுகள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படுகின்றன.

இரு நாடுகளும் எந்த உடனடி எதிர்வினையும் தெரிவிக்காத விதத்தை வைத்தே இது மிகவும் முக்கியமான விஷயம் என்று தெரிகிறது. அதிகாரப்பூர்வமாக எதுவும் கூறப்படாததால், இதுவொரு முக்கியமான விஷயமாக இருக்காது என்று கூறிவிட முடியாது.

மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளதால், தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மிகக் கடுமையான குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டிருக்கலாம் அல்லது அவர்கள் ஏதேனும் கடுமையான குற்றம் செய்திருக்கலாம்,” என்று கமர் கூறுகிறார்.

### இந்தியாவுக்கு இது பெரிய ராஜதந்திர சவாலா?

“இதை ராஜதந்திர சவால் என்று அழைப்பது சரியாக இருக்காது. ஏனெனில் அங்கு சென்றவர்கள் இந்திய கடற்படையின் முன்னாள் வீரர்கள். ஆனால் அவர்கள் அரசு பணி நிமித்தமாகச் செல்லவில்லை. தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார்கள். எனவே இதை ராஜதந்திர சவால் என்று கூறுவது கடினம்.

இது அரசியல் ரீதியாகவும் ராஜதந்திர ரீதியாகவும் சில தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஆனால் அதை இப்போதே சொல்வது கடினம்,” என்கிறார் கமர்.

மேலும் பேசிய அவர், “இந்த விவகாரம் நீதிமன்றத்தில் இருந்ததால், இது குறித்து பொதுவெளியில் எந்தத் தகவலும் பகிரப்படவில்லை. எனவே, வெளிவிவகாரக் கொள்கையின்படி நிதானமான முறையில் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்திய அரசுக்கு முடிவு குறித்த விவரங்களை முதலில் தெரிவிக்க வேண்டும். இதில் மேல்முறையீடு செய்ய வாய்ப்பு உள்ளதா இல்லையா என்பதை இந்திய அரசு ஆராயும். கட்டாரில் மேல்முறையீடு செய்ய வாய்ப்பு இருந்தால், அதிலிருந்து எவ்வளவு அதிகபட்ச பலன் கிடைக்கும் என்பதைப் பார்க்க வேண்டும்,” என்றும் கூறினார்.

“இந்த விவகாரம் சர்வதேச நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்படுமா இல்லையா என்பதையும் பார்க்க வேண்டும். இந்த விவகாரத்தில் பல அம்சங்களைப் பார்க்க வேண்டும். இதை இரு நாட்டு அரசுகளும் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும்,” என்கிறார் கமர்.

### இந்தியா- கட்டார் இடையிலான உறவு எப்படிப்பட்டது?

இந்தியாவுக்கும் கட்டாருக்கும் இடையே நட்புறவு உள்ளது. ஆனால் இந்த உறவில் முதல் சவால் 2022ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் வந்தது. பாஜக செய்தித் தொடர்பாளர் நூபுர் ஷர்மா ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் முகமது நபியைப் பற்றி இழிவான கருத்துகளை வெளியிட்டார்.

அந்த நேரத்தில், இந்தியா ‘பொது மன்னிப்பு” கோர வேண்டும் என்று கூறிய முதல் நாடு கட்தார். கட்டார் இந்திய தூதரை அழைத்து தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது. இஸ்லாமிய நாடுகளில் கோபம் பரவாமல் இருக்க, பாஜக உடனடியாக நூபுர் ஷர்மாவை நீக்கியது.

இப்போது எட்டு முன்னாள் இந்திய கடற்படை வீரர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனை, இந்தியா-கட்டார் உறவுகளுக்கு இடையிலான இரண்டாவது பெரிய சவாலாகக் கருதப்படுகிறது. கட்டாரில் சுமார் 8-9 லட்சம் இந்தியர்கள் பணிபுரிவதால், அங்குள்ள இந்தியர்களின் நலன்களுக்குப் பங்கம் விளைவிக்கும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்க இந்திய அரசு முயலும்.

இந்தியா கட்டாரில் இருந்து இயற்கை எரிவாயுவையும் இறக்குமதி செய்கிறது. கட்டார் மிகப்பெரிய அளவில் இயற்கை எரிவாயு ஏற்றுமதி செய்யும் நாடு.

காஸாவில் இஸ்ரேலின் தாக்குதல் நடந்து கொண்டிருக்கும் வேளையில், அதிக அமெரிக்க பணயக் கைதிகளை ஹமாஸ் விடுவிக்க வேண்டும் என்று கட்டார் இஸ்ரேலுடனும் பாலத்தீனத்துடனும் மத்தியஸ்தம் செய்ய முயலும் நேரத்தில் இந்த விவகாரம் வெளிச்சம் பெற்றுள்ளது. ●

